இந்தியாவில் இஸ்லாத்தின் அறிமுகமும் அது ஏற்படுத்திய தாக்கமும்

அக்ரம் அப்துல் ஸமத்

உள்ளடக்கம்

1. முன்னுரை.....04

2. பண்டைய இந்தியா குறித்த ஓர் அறிமுகம்.....06

3. இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமாதல்.....09

4. இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி பற்றிய ஒரு பார்வை.....18

5. இந்தியாவில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கம்.....24

6. முடிவுரை.....34

7. உசாத்துணைகள்.....35

முன்னுரை

இன்றைய சூழலில் வரலாற்றுத் தேடல் என்பது, குறிப்பாக முஸ்லிம் சிறுபான்மைச் சமூகங்களைப் பொறுத்தவரையில், மிகவும் இன்றியமையாத ஒரு பணி என்று நினைக்கிறேன். இது ஒரு அறிவியல் சார்ந்த தேவை என்பது போல் இன்றைய நிலையில் அதனை விடவும் முக்கியமாக அந்த சமூகங்களின் அரசியல் மற்றும் சமூக இருப்பு சார்ந்த ஒரு தேவையாக இருக்கிறது. நான் இவ்வாறு சொல்வதற்கு ஒரு காரணமிருக்கிறது.

அதாவது, செப்டம்பர் 11 அமெரிக்க இரட்டைக் கோபுரத் தாக்குதல் உலகின் போக்கில் பல மாற்றங்களுக்குக் காரணமாகியது. குறிப்பாக தேசப் பாதுகாப்பு, தேசப் பற்று போன்ற காரணிகளை முன்னிறுத்தி நவதேசியவாத சிந்தனைகள் களத்திற்கு வந்தன. அவை இனத்தேசியவாதமாக அல்லது மதத்தேசியவாதமாக பல்வேறு வடிவங்களில் வெளிப்பட்டன. அவை சார்ந்த சட்டங்களும் இயற்றப்பட்டன. ஒரு தேசத்தின் கலாச்சாரத்தை முதன்மைப்படுத்துவதுதான் தேசப்பற்று என்று அடையாளப்படுத்தப்பட்டது. இங்கு பன்மைத்துவமும் சகவாழ்வும் கேள்விக் குறியானது. இந்த சூழ்நிலையால் பெரிதும் பாதிக்கப்பட்டவர்கள் ஐரோப்பிய மற்றும் ஆசிய முஸ்லிம் சிறுபான்மையினராவர். அவர்கள் தேசபற்றற்றவர்களாகவும் தேசத்தை சுரண்டி வாழும் சுயநலமிகளாகவும் சித்திரிக்கப்பட்டனர். இது அவர்களது அரசியல் மற்றும் சமூக இருப்புக்கு பெரும் சவாலாக அமைந்தது. இந்த சூழலில்தான் வரலாற்று ரீதியாக முஸ்லிம்கள் தமது இருப்பையும் பங்களிப்பையும் நிரூபிக்க வேண்டிய ஒரு நிலைக்குத் தள்ளப்படுகிறார்கள்.

இந்திய முஸ்லிம்களைப் பொருத்தவரையில் இந்தத் தேவை மிகவும் அதிகமாகக் காணப்படுகிறது. அங்கு மதத்தேசியவாத அரசியல் விழுது விட்டு வியாபித்து வளர்ந்திருக்கிறது. அண்மையில் வெளியிடப்பட்ட பாபரி மஸ்ஜித் தொடர்பான மேல் நீதிமன்றத்தின் தீர்ப்பு இதற்கு மிகவும் தெளிவான சான்றுகளில் ஒன்று. மாத்திரமன்றி இந்திய முஸ்லிம் வரலாறு மிகவும் திரிபு படுத்தப்பட்டு பதியப்பட்டிருக்கும் ஒரு நிலையும் காணப்படுகிறது. மன்னர் அக்பர் அவர்கள், சுமார் 16000 இராஜ புத்திரப் பெண்கள் “ஜோஹர்” என்னும் தீக்குழிப்புக்குக் காரணமாக இருந்தார் என்ற செய்தியை ஆங்கிலேயர்கள் பதிவு செய்துள்ளனர். இதனை ஆதாரமாகக் கொண்டு அசோக மித்திரன் என்ற இந்திய எழுத்தாளர் ஒருவர் இந்து பத்திரிகையில் இது பற்றி எழுதி முஸ்லிம்கள் மீது வன்மத்தைக் கக்கி இருந்தார். இதற்குப் பதில் தரவந்த தாழை மதியவன், ஆங்கிலேயர்களும் அவர்களுக்குக் கையாளாக இருக்கும் அசோக மித்திரர்களும் முஸ்லிம்களைப் பற்றி எழுதியுள்ள கட்டுக் கதைகளே இன்று சரித்திரமாகியுள்ளன, உண்மைகளைப் பொய்களாகவும் பொய்களை உண்மை போலவும் பேசுகின்றன என்கிறார்[1]. வரலாறு திரிபு படுத்தப்பட்டது மாத்திரமன்றி வரலாற்று நிகழ்வுகளுக்கு வழங்கப்பட்ட விளக்கங்களும் அவ்வாறுதான் காணப்படுகின்றன. உதாரணமாக, இந்துக் கலாச்சாரத்தில் காணப்பட்ட சிசுக் கொலை மற்றும் உடன் கட்டை ஏறுதல் போன்ற நடைமுறைகளுக்கு, முஸ்லிம்களது நடவடிக்கைகளால் நிகழ்ந்த எதிர்த்தாக்கம் என்றே விளக்கமளிக்கிறார்கள். அதாவது, முஸ்லிம் சுல்தான்களும், கவர்னர்களும் அரச பிரதானிகளும் இந்துப் பெண் பிள்ளைகள் மற்றும் பெண்களை பலவந்தமாக திருமணம் செய்ய முற்பட்டமை காரணமாக, அவர்களது மானம் மற்றும் கற்பு என்பன உயிரை விடவும் முக்கியமானது என்றவகையிலேயே இத்தகைய நடைமுறைகள் தோற்றம் பெற்றன, என்கின்றனர்[2].

எனவே இந்திய முஸ்லிம்கள் தமது வரலாற்றையும் வரலாற்றில் இந்தியாவுக்கு எதனை வழங்கினார்கள் என்பதையும் மிகவும் தெளிவாக எடுத்துரைக்க வேண்டிய ஒரு கட்டாயம்

இருக்கிறது. இந்திய முஸ்லிம் வரலாற்றாசிரியர்கள் மாத்திரமன்றி முஸ்லிமல்லாத பல வரலாற்று ஆசிரியர்களும் இப்பணியை மேற்கொள்ள முயற்சித்திருக்கிறார்கள். அவர்களது முயற்சிகளில் இருந்து சில துளிகளை எடுத்துக் காட்டுவதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும். இது ஒரு பண்புசார் ஆய்வு என்ற வகையில் நூல்கள், ஆய்வுக் கட்டுரைகள், சஞ்சிகைகள், வெப்தளங்கள் போன்றவையே இங்கு ஆதாரமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

அக்ரம் அப்துல் ஸமத்

18-11-2019

அடிக்குறிப்புக்கள்

1. தாழை மதியவன், முஸ்லிம் மன்னர்கள் ஆண்ட இந்தியா, சென்னை, சாஜிதா புக் சென்டர், 2017, ப.3.
2. Purnima P, Impact of Islam on Hinduism/ History of India, Available at, http://www.historydiscussion.net/history-of-india/impact-of-islam-on-hinduism-history-of-india/6195, Seen on 18-11-2019.

பண்டைய இந்தியா குறித்த ஓர் அறிமுகம்

இந்தியாவின் வரலாற்று ஓட்டம் குறித்து, இந்திய வரலாற்றாசிரியரான தாரா சந்த் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் "இந்திய வரலாற்றை மூன்று கட்டங்களாக வகுத்து நோக்க முடியும், பண்டைய காலம், மத்திய காலம், நவீன காலம். பண்டைய காலம் என்பது, கிறிஸ்துவுக்கு முன்பிருந்து கி.பி எட்டாம் நூற்றாண்டு வரையான காலத்தைக் குறிக்கும். மத்திய காலம் என்பது, சுமார் ஆயிரம் வருடங்களைக் கொண்ட காலமாகும், அது கி.பி எட்டாம் நூற்றாண்டு முதல் கி.பி பதினெட்டாம் நூற்றாண்டு வரையான காலமாகும். நவீன காலம் என்பது, பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் தற்போது வரை தொடரும் காலமாகும்"[1] என்றார்கள். இப்பத்தியில் பண்டைய காலம் என அடையாளம் காணப்பட்ட முதல் காலப்பகுதி குறித்து மாத்திரமே சில கருத்துக்கள் பரிமாறப்பட உள்ளன. ஏனெனில் மத்திய காலத்தின் ஆரம்பத்தில் அல்லது பண்டைய காலத்தின் இறுதியில் இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமாகிறது. இஸ்லாம் அறிமுகமாகுவதற்கு முன்னர் இருந்த இந்திய சூழ்நிலையை சற்று விளங்கிக் கொள்வதே இப்பத்தியின் பிரதான நோக்கமாகும்.

தாரா சந்த் அவர்கள் பண்டைய காலத்தை மேலும் நான்கு கட்டங்களாக வகுத்து நோக்குகிறார்கள். முதலாவது வேதகாலம், இது கி.மு. ஏழாம் நூற்றாண்டுடன் நிறைவு பெறுகிறது. இரண்டாவது புத்தர் காலம், இது கி.மு இரண்டாம் நூற்றாண்டுடன் நிறைவு பெறுகிறது. மூன்றாவது ஆரம்ப இந்து மதக் காலம், இது கி.பி மூன்றாம் நூற்றாண்டின் நடுப்பகுதியுடன் நிறைவு பெறுகிறது. நான்காவது பிந்திய இந்து மதக் காலம், இது கி.பி எட்டாம் நூற்றாண்டுடன் நிறைவு பெறுகிறது[2].

தாரா சந்த் அவர்கள் பண்டைய இந்திய வரலாற்றை வேத காலத்திலிருந்து ஆரம்பித்தாலும் வேத காலத்தின் ஆரம்பம் எப்போது என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. பொன். தங்கமணி அவர்கள் குறிப்பிடுவது போல் வேதகாலம் ஆரியர்களின் வருகைக்குப் பின்னரே ஆரம்பிக்கிறது. ஏனெனில் வேதங்கள் ஆரியர்களின் காலத்திலேயே எழுதப்பட்டன. அந்த வகையில் வேத காலம் கி.மு 2500 க்கும் கி.மு 2000 க்கும் இடைப்பட்ட காலத்தில் ஆரம்பித்திருக்கலாம். ஏனெனில் வேதங்கள் இந்தக் காலத்திலயே எழுதப்பட்டன என்கிறார்[3]. மாத்திரமன்றி வேத காலத்திற்கு முன்னரேயே இந்தியாவில் திராவிட நாகரீகமும் சிந்து சமவெளி நாகரீகமும் காணப்பட்டதாகக் குறிப்பிடுகிறார். ஆரியர்கள் இந்தியாவுக்குள் நுழைந்த போது, இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் திராவிடர்கள், ஆரியர்களை ஆரம்பத்தில் எதிர்த்துப் போராடியவர்கள் இவர்களே என்கிறார். திராவிடர்கள் எகிப்திலிருந்து அல்லது மத்தியாசியாவிலிருந்து அல்லது மத்திய தரைக் கடல் பகுதியிலிருந்து இந்தியாவுக்கு வந்து குடியேறி சிறந்த ஒரு நாகரீகத்தைக் கட்டி வளர்த்தவர்கள் என்கிறார்[4]. அதுபோல் ஆரியர்களுக்கு முன்பு மிகவும் வளர்ச்சியடைந்த ஒரு நாகரீகமாக சிந்து சமவெளி நாகரீகம் காணப்பட்டது என்கிறார். கி.மு 5000 க்கும் கி.மு 2500 க்கும் இடையப்பட்ட காலத்தில் சிந்து சமவெளி நாகரீகம் காணப்பட்டதாகக் குறிப்பிடுகிறார்[5].

வேதகாலம், ஒவ்வொரு மனிதக் குழுமத்திற்கு இடையிலான மோதல்களுக்குரிய காலமாகவே காணப்பட்டது. ஒவ்வொரு தரப்பினரும் தமது கலாச்சாரங்களை பிறர் மீது திணிக்கும் முயற்சியும் அதற்கான போராட்டங்களும் நிறைந்த காலமாக இது இருந்தது. இந்த வாழ்வை பிரதிபளிக்கும் வகையிலேயே அன்று எழுதப்பட்ட வேதங்கள் காணப்பட்டன. ஆரம்பத்தில் மோதல் நிறைந்த காலமாக இருந்தாலும் பிற்பட்ட நாட்களில் வெற்றி பெற்றவர்களும் தோல்வி அடைந்தவர்களும் அமைதியான வாழ்வுக்குத் திரும்பியதைக் காணலாம். அதனால் மத நம்பிக்கைகள், வணக்க

வழிபாட்டு முறைமைகள் என்பன இக்காலத்தில் தோற்றம் பெற்றன. குறிப்பாக அத்வைதக் கொள்கை, சிலை வணக்கம் மற்றும் மிருக பழி என்பன இக்காலத்தில் தோற்றம் பெற்றவையாகும்.

அடுத்து புத்தர் காலத்தைப் பொறுத்தவரை, புரட்சிகரமான ஒரு காலப்பகுதியாகும். புதிய தத்துவங்கள், சிந்தனைகள், கலைகள், மதக் கொள்கைகள் தோன்றிய ஒரு காலம். வேதகால சிந்தனைகள் மற்றும் நடைமுறைகளைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டது இக்காலம். இதற்கு முக்கியமான ஒரு காரணம் இருக்கிறது. கி.மு ஆறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்ட காலம் உலக வரலாற்றில் பொற்காலமாக அடையாளம் காணப்படுகிறது. ஏனெனில் சிந்தனைகளும் தத்துவங்களும் நாட்டுக்கு நாடு கண்டம் விட்டுக் கண்டம் இக்காலப்பகுதியில் நகரத் தொடங்கியது. எகிப்து, கிரேக்கம், ரோமம் முதல் சீனா வரை சிந்தனைகளின் பரிமாற்றம் நிகழ்ந்தது. பபிலோனியாவின் அறிவு மற்றும் பொருளாதார வளர்ச்சி இதற்கு பெரிதும் வழிவகுத்தது. இதன் தாக்கம் இந்திய மண்ணிலும் நிகழ்ந்ததன் விளைவாக பல்வேறு மாற்றங்கள் நிகழ்ந்தன. பௌத்த மற்றும் ஜைன மதங்கள் தோற்றம் பெற்று இக்காலத்தில் வளர்ச்சியடைந்தன. சிவா, விஷ்ணு போன்ற கடவுளர்களை வணங்கும் முறை தோற்றம் பெற்றது. உபநிடதங்கள், பகவத் கீதை போன்ற நூல்கள் எழுதப்பட்டன. அதுபோல், மொழி, இலக்கணம், வானியல், கணிதவியல், மருந்துவம் போன்ற அறிவியல் கலைகளும் நிர்வாகம், கட்டடக் கலை, சங்கீதம், சிற்பம், சித்திரம் போன்ற வாழ்வியற் கலைகளும் வளர்ச்சியடைந்தன.

அடுத்து ஆரம்ப இந்து மதக் காலத்தைப் பொருத்தவரை, புத்தர் காலத்தின் இறுதியில் நடைபெற்ற யுத்தங்களில் புத்தர் காலத்தின் சிந்தனை வளர்ச்சியில் பெரும் பாதிப்பு ஏற்பட்டது. தொடர்ந்து இந்து மதத்தின் செல்வாக்கு மேலோங்கத் தொடங்கியது. சமஸ்கிருத மொழி முதலிடத்தைப் பிடித்துக் கொண்டது. பௌத்த மதம் நாடு கடந்து பல்வேறு இடங்களுக்குப் பரவியிருந்தாலும் அது தன்னுள் ஹீனயானா, மஹாயானா என இரண்டாகப் பிளவு பட்டது. ஜைனி மதமும் இரண்டாகப் பிளவு பட்டது.

இறுதியாக பிந்திய இந்து மதக் காலத்தில், சுமார் ஒரு நூற்றாண்டு காலம் இருண்ட காலமாகவே காணப்பட்டது. எனினும் குப்தர் குடும்பத்தினரின் நான்கு நூற்றாண்டு கால ஆட்சியில் இந்து மதம் மீண்டும் பெரும் எழுச்சி கண்டது. சிவா, விஷ்ணு கடவுளர்களின் வணக்கம் மீண்டும் முதலிடத்திற்கு வந்தது. பௌத்த, ஜைனி மதங்கள் அழிவை நோக்கிச் சென்றன. சமஸ்கிருத் மொழி நன்கு வளர்ச்சி கண்டு பரவியது. மஹாபாரதம், இராமாயணம் போன்ற காப்பியங்கள் தோற்றம் பெற்றன. காளிதாஸ் போன்ற பெரும் கவிஞர்கள் தோன்றினர். பஞ்ச தந்திரக் கதைகள் இக்காலப்பகுதியிலேயே தோற்றம் பெற்றது. பாரசீகக் கவிதைகளான கலீலா வதிம்னாவுக்கான மூலமாக பஞ்ச தந்திரக் கதைகள் இருந்ததாகக் குறிப்பிடுவர். அஜன்தா ஓவியங்களும் இக்காலத்திற்கு உரியனவாகும்[6].

தாரா சந்த் அவர்கள் குறிப்பிடுவது போல்[7], இந்திய நாகரீகம் வரலாற்றின் ஆரம்பம் முதலே பல்வேறு முரண்பட்ட கலாச்சாரங்களின் தாக்கம் நிறைந்தாகவே காணப்பட்டது. இயற்கை அனர்த்தங்கள் அல்லது போர்கள் காரணமாக இந்தியா நோக்கி பல்வேறு பகுதிகளிலும் இருந்து நகர்ந்த மக்கள் இந்திய நாகரீகத்தின் செழுமைக்குப் பெரியளவில் காரணமானார்கள். இந்திய மக்களின் வாழ்க்கை அடிப்படையில் உயர்சாதி என்றும் தாழ்ந்த சாதி என்றும் இரு கூறுகளாகப் பிரிந்தே காணப்பட்டது. இவர்களில் உயர்சாதியினர் எண்ணிக்கையில் குறைவாக இருந்த போதிலும் செல்வாக்கிலும் அதிகாரத்திலும் அவர்களே அதிகமானவர்களாக இருந்தனர். அவர்களே நம்பிக்கைகளையும் சமூக ஒழங்குகளையும் வகுக்கின்றவர்களாக இருந்தனர். தாழ்ந்த சாதியினர் அவர்களுக்கு சேவகம் செய்யும் வாழ்வொழுங்கே காணப்பட்டது. இந்த இரண்டு தரப்பினருடைய வாழ்வு முறையின் கலப்பில்தான் இந்திய நாகரீகம் தோன்றுகிறது. இத்துடன் மிக முக்கியமாக மூன்றாவது ஒரு காரணியும் சம்பந்தப்படுகிறது, அதுதான்

வெளிநாட்டவர் வருகை எகிப்தியர், ஆரியர், அரேபியர் என்று இந்தியாவை நோக்கி வந்த பல்வேறுபட்ட நாகரீகங்களைக் கொண்ட மக்கள் கூட்டத்தினருடைய கலப்பும் இணைந்து இந்திய நாகரீகம் தனிவடிவம் கொண்டதாக மாறுகிறது.

வரலாற்றுக் குறிப்புக்களைப் பார்க்கின்ற பொழுது, பண்டைய இந்தியா என்பதற்கு மிகத் துல்லியமான எல்லைகளைக் குறிப்பிடுவது சிரமமானது. மாத்திரமன்றி இந்தியா என்ற தனிப்பெயரும் அதற்குக் காணப்படவில்லை. உண்மையில் ஆரம்ப நாட்களில் அவ்வப்போது தோன்றுகின்ற ராஜ்யங்களை மையப்படுத்தியே குறித்த இடங்களுக்கான பெயர்கள் வழங்கப்பட்டன. இந்தியா என்ற பெயர் பிற்பட்ட நாட்களிலே வழங்கப்பட்டது. செய்யத் சுலைமான் நத்வி அவர்கள் குறிப்பிடுவது போல், முஸ்லிம்களது வருகைக்குப் பின்னர்தான் இந்தியா என்ற பெயர் புழக்கத்திற்கு வந்தது. பாரசீகர்கள் மஹ்ரான் பகுதியைக் கைப்பற்றிய பின்னர் அதற்கு அப்பால் இருந்த இடங்களுக்கு ஹின்தாஹு என்று பெயரிட்டனர். காரணம் அந்தப் பகுதி சிந்து நதியை மையப்படுத்தி அமைந்திருந்தது. சமஸ்கிருத மொழியில் "ச" என்ற எழுத்து "ஹ" என்பதாக உச்சரிக்கப்பட்டது. அறபிகள் சிந்துப் பகுதி தவிர்ந்த ஏனைய பகுதிகளுக்கு ஹின்த் என்று வழங்கினார்கள். இந்த சொல் மறுவி இந்தியா என்று புழக்கத்தில் வந்திருக்கிறது. ஹின்த் என்ற சொல் அறபுகளிடம் விருப்பத்திற்குரிய ஒரு பெயராக இருந்திருக்கிறது. அதனால் தமது பெண்மக்களுக்கும் இப்பெயரை அவர்கள் வைத்திருக்கிறார்கள் என்று கூறுகிறார்[8]. அதுபோல் மத்திய காலப்பகுதியில் இந்தியா என்று வழங்கப்பட்ட எல்லை, இன்றைய பாகிஸ்தான், இந்தியா, வங்காளதேசம், நேபாள், பூட்டான், பர்மா போன்ற பகுதிகளையும் உள்ளடக்கியிருந்திருக்கிறது.

அடிக்குறிப்புக்கள்

1. தாரா சந்த், மொ.பெ, முகம்மத் அய்யூப் அந்நத்வி, அஸருல் இஸ்லாம் பிஸ்ஸகாபா அல் ஹின்தியா, பெய்ரூத், முஅஸ்ஸதுல் பிக்ரில் அரபி, 1946, ப.11.
2. மேலது.
3. பொன். தங்கமணி, பழங்கால இந்தியா அரசியலும் பண்பாடும் கி.பி 1206 வரை, தமிழ் நாடு, பொன்னையா பதிப்பகம், 1992, ப.34.
4. மேற்படி, பக்.17,18.
5. மேற்படி, ப.30.
6. தாரா சந்த், அஷ்ஷகாபா அல்ஹின்தியா வவுஸூலுல் முஸ்லிமீன் இலல் ஹின்த், ஷகாபதுல் ஹின்த், பாகம் 13 இதழ் 1, 1950, பக்.15-38.
7. தாரா சந்த், மொ.பெ, முகம்மத் அய்யூப் அந்நத்வி, அஸருல் இஸ்லாம் பிஸ்ஸகாபா அல் ஹின்தியா, பக்.9,10.
8. செய்யத் சுலைமான் நத்வி, மெ.பெ.அஹ்மத் முஹம்மத் அப்துல் ரஹ்மான், அல் அலாகாத் அல் அரபிய்யா அல் ஹின்தியா, கெய்ரோ, அல்மர்கஸுல் கௌமி லித்தர்ஜமா, 2008, ப.35.

இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமாதல்

இந்தியாவில் இஸ்லாம் அறிமுகமான வரலாற்றை நாம் இரண்டு கண்ணோட்டங்களில் விளங்கப்படுத்த முடியும். ஒன்று இஸ்லாம் ஒரு மார்க்கமாக அறிமுகமானமை இரண்டு இஸ்லாம் ஒரு ஆட்சியாக அறிமுகமானமை. இந்த இரண்டும் ஒரே காலப்பகுதியில் நிகழவில்லை. இந்த உலகத்திற்கு இஸ்லாம் அறிமுகமான காலம் முதலே இந்தியாவிலும் இஸ்லாம் ஒரு மார்க்கமாக அறிமுகமாகியிருக்கிறது என்பதற்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. ஆனால் இஸ்லாம் ஒரு ஆட்சியாக அறிமுகமானமை என்பது பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்த ஒன்றாகும். இந்திய இஸ்லாமிய வரலாற்றை எழுதிய பலர் இஸ்லாம் ஒரு மார்க்கமாக அறிமுகமான உண்மையை மறைத்து, அது ஆட்சியாக அறிமுகமானதை மாத்திரம் வைத்துக் கொண்டு, இஸ்லாம் வெறும் ஏகாதிபத்திய நோக்கில் இந்தியாவுக்கு வந்த ஒன்று என்ற அறிமுகத்தை வழங்க முற்படுகின்றனர். இது தவறானது என்பதை இந்திய வரலாற்றை நேர்மையாகத் தேடும் ஒருவர் புரிந்து கொள்ள முடியும். அந்தவகையில் இங்கு இந்தியாவுக்கு இஸ்லாம் அறிமுகமான இந்த இரண்டு வடிவங்கள் குறித்தும் அடுத்து சற்று பார்வையைச் செலுத்துவோம்.

இஸ்லாம் ஒரு மார்க்கமாக அறிமுகமானமை

அறபு இந்தியத் தொடர்பு

இந்தியாவில் இஸ்லாம் ஒரு மார்க்கமாக அறிமுகமானமை குறித்துப் பேசுவதற்கு முன்னர் மற்றொரு உண்மையை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். அதுதான் இந்தியாவுக்கும் அறபுலகத்திற்கும் இடையில் தொடர்புகள் இருந்து வந்துள்ளன. இந்தத் தொடர்புகள் உண்மையில் மிகவும் தொன்மையானவை. அபூ ரைஹான் அல்பிரூனியை மேற்கோள் காட்டி, செய்யத் சுலைமான் நத்வி அவர்கள் இவ்வாறு குறிப்பிடுகிறார்கள். "புத்தர் காலத்தில் அறபுலகிற்கும் இந்தியாவுக்கும் இடையில் தொடர்புகள் காணப்பட்டிருக்கின்றன. ஷாம் பிரதேசம் குறிப்பாக ஈராக்குடன் மிக நெருங்கிய உறவு காணப்பட்டிருக்கிறது. ஈராக்கில் புத்தமதத்தின் அடையாளங்கள் இருந்தமைக்கான சான்றுகள் காணக்கிடைக்கின்றன. ஈராக்கிலிருந்த புத்தமதப் பிரிவினர் சம்னீக்கள் என்று அழைக்கப்பட்டனர். இதனை அல்பிரூனியின் வார்த்தைகள் உறுதிப்படுத்துகின்றன, சம்னீக்கள் இந்தியாவுக்குத்தான் மிகவும் நெருக்கமானவர்கள், குராஸான், பாரசீகம், ஈராக், மௌஸில், ஷாம் எல்லை வரை அவர்கள் தமது மதத்தைப் பின்பற்றி வாழ்ந்து வந்து வந்தனர் என்கிறார்"[1]. புத்தர் காலம் என்பது கி.மு ஆறாம் நூற்றாண்டுக்கும் இரண்டாம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலமாகும். அதனடிப்படையில் அறபுலகுடன் கிறிஸ்துவுக்கு முன்பிருந்தே இந்தியா தொடர்புகளைப் பேணி வந்திருக்கிறது என்பது புரிகிறது. அது வெறுமனே வியாபாரத் தொடர்பாக மாத்திரமன்றி கலாச்சாரத் தொடர்பாகவும் இருந்திருக்கிறது என்பதைக் கண்டு கொள்ளலாம்.

இந்திய அறபுத் தொடர்பின் தொன்மை குறித்து கி. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிடும் பொழுது, தமிழ் நாட்டின் சங்க கால இலக்கியங்களை ஆதாரமாகக் காட்டி, தமிழ் நாட்டுக்கும் அறபுலகத்திற்கும் இடையிலான தொடர்பு மிகவும் பழமையானது என்கிறார். "அரேபிய வணிகர்களை தமிழர்கள் யவனர் என்றும் சோனகர் என்றும் கூறினர். (யவனர் தந்த வினைமான் நன்கலம் பொன்னோடு வந்து கறியோடு பெயரும்) என்று அகநானூறும், (நீரின் வந்த நிமிர் பரிப்புரவியும்) என்று பட்டினப்பாலையும் குறிப்பிடுகின்றது. எனவே சங்க காலம்

தொட்டு தமிழர்களுக்கும் அறேபியருக்கும் இருந்த வணிகத் தொடர்பு தெரிய வருகிறது" என்கிறார்[2]. தொடர்ந்து, ம.மு. உவைஸ் அவர்களை மேற்கோள் காட்டி "இஸ்லாம் உலகில் பரவுவதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே முஸ்லிம் மக்களின் மூதாதையரான அறபு மக்கள் தமிழ் நாட்டுடன் தொடர்பு கொண்டிருந்தனர். தமிழ் நாட்டிற்கு அவ்வறபு நாட்டு மக்கள் வந்து வணிகத்துறையிலே பெரிதும் ஈடுபட்டனர். அதற்கான அகச்சான்றுகளைச் சங்க கால இலக்கியங்களில் நிறையக் காணலாம்" என்கின்றார்[3].

வரலாற்றாசிரியர் தாரா சந்த் அவர்கள் அறபு இந்தியத் தொடர்பை மிகவும் விரிவாகவும் ஆழமாகவும் அணுகியிருக்கிறார். அவர் இது பற்றிக் கூறும் பொழுது, "இந்தியாவுக்கும் மேற்கு நாடுகளுக்கும் குறிப்பாக அறபுப் பிரதேசங்கள், பலஸ்தீன், எகிப்து போன்றவற்றிற்கும் இடையிலான வியாபாரத் தொடர்புகள் மிகவும் தொன்மையானவை. மன்னர் சுலைமான் அவர்கள் தற்போதைய மனிப்பூர் என்னும் இடத்திலிருந்து தங்கம், வெள்ளி, குரங்குகள், மயில்கள் போன்ற பலவற்றை இறக்குமதி செய்திருக்கிறார்கள். பாரசீக வளைகுடாவிலும் செங்கடலிலும் இந்திய வணிகத்திற்கென்றே துறைமுகங்கள் அமைக்கப்பட்டன. கிரேக்கர்கள் அரிசி, இஞ்சி போன்ற உணவுப் பொருட்களை மலையாளக் கரையோரங்களில் இருந்து இறக்குமதி செய்திருக்கின்றனர். பபிலோனியாவுக்குத் தென்மேற்கே அறபுகள் உருவாக்கிய ஹீரா என்ற நகரத்தை ஸாஸானியர்கள் தமது ஆதிக்கத்தில் கொண்டு வந்தனர். அந்த நகரம் இந்திய வியாபாரத்திற்கு பெயர் போனது. அந்த நகர மக்கள் தமது வீடுகளில் இருந்து கொண்டே இந்தியாவிலிருந்தும் சீனாவில் இருந்தும் வரும் வியாபாரக் கப்பல்களைப் பார்த்துக் கொண்டிருப்பர். அறபுகள் பொதுவாக கிழக்கிற்கும் மேற்கிற்கும் வியாபாரம் செய்தவர்கள். அதற்காக தமது நாடுகளில் பல தளங்களை அமைத்தனர். யமன் பிரதேசத்தின் ஷிஹர் துறைமுகம் வியாபாரத்திற்கான முக்கிய தளமாக விளங்கியது. இஸ்லாத்தின் வருகைக்கு முன்னர் இந்தியாவின் ஷோல், கில்யான், சோபாரா போன்ற நகரங்களில் அறபுக் குடிகள் வாழ்ந்திருக்கின்றனர். மன்னர் அகார்தர்ஸதீஸ் காலத்தில் மலையாளக் கரைகளில் அறபுக் குடிகள் அதிகரித்தனர். அறபுகளது மதத்தை உள்நாட்டு மக்கள் தழுவும் நிலையும் காணப்பட்டது. அறபுகளும் பாரசீகர்களும் கி.பி பதினான்காம் நூற்றாண்டு வரை இந்தியக் கரைகளில் செல்வாக்குடன் காணப்பட்டனர்" என்கின்றார்[4].

அறபு இந்தியத் தொடர்பு குறித்து செய்யத் இப்றாகீம் அவர்கள் பின்வருமாறு கூறுகிறார்கள் "நபி பெருமனானார் அவர்கள் வாழ்ந்த காலத்தில் தென்னிந்தியாவில் குறிப்பாக மலையாளத்தில் புத்த மதமும் பிராமண மதமும் யூத மதமும் கிறிஸ்தவ மதமும் ஜைன மதமும் நெருப்பை வணங்கும் மஜூஸி மதமும் ஆரியரல்லாத பூர்வீக இந்தியர்களின் கொள்கைகளும் இருந்தன. இஸ்லாமியக் காலத்திற்கு முன்னரே அறபு நாட்டிலிருந்து பலதெய்வ வணக்கத்தாரும் ஸாபி இனத்தாரும் அங்கு வந்து வியாபாரம் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களில் சிலர் அங்கு நிரந்தரமாகக் குடியேறியும் விட்டார்கள். அக்காலத்தில் மலையாளத்தில் பல சிற்றரசுகள் இருந்தன. அறபு நாட்டு வியாபாரிகளுடன் இந்த சிற்றரசர்கள் வியாபாரத் தொடர்பு கொண்டு இலாபம் அடைந்தனர்....நபி பெருமானார் காலத்திற்கு முன்னரே அறபு நாட்டார் வடக்கில் கருங்கடற்கரையிலிருந்து ரஷ்யா வரையிலும், தென்கிழக்கில் மலையாளம், சோழமண்டலக்கரை, இலங்கை, ஜாவா, சுமாத்திரா, சீனா ஆகிய நாடுகளுக்குப் பாய்மரக் கப்பல்களில் சென்று வியாபாரம் செய்தார்கள். பெருமனாரின் ஒரு ஸஹாபியுடைய அடக்கஸ்தலம் கான்டன் எனும் சீனத் துறைமுகத்தில் இருப்பதாகவும், அவரது பெயர் வஹப் என்றும் கூறப்படுகிறது. மற்றொரு ஸஹாபியான அகாஷா என்பவரது அடக்கஸ்தலம் தென்னாற்காடு மாவட்டத்தில் பரங்கிப்பேட்டை என்னுமிடத்தில் இருக்கின்றது. இன்னொரு ஸஹாபியான தமீம் அல் அன்ஸாரி என்பவரின் அடக்கஸ்தலம் சென்னைக்குப் பன்னிரண்டு மைல் தெற்கில் கோவளம் என்னும் கடற்கரைக் கிராமத்தில் இருக்கின்றது. எனவே இதற்குப் பல நூற்றாண்டுகள் வரை

தென்னகத்தில் முஸ்லிம் ஆட்சி நடக்காத காலத்திலேயே இந்த மஹான்கள் வந்ததை ஆராய்வோமாயின் அக்காலத்திலும் அதற்கு முன்னரும் அறாபியர்கள் தாரளமாக தென்னகத்திற்கு வந்து கொண்டிருந்திருக்கிறார்கள் என்று தெரிகின்றது. இதைப் பற்றி ஃபரஷ்தா என்னும் முஸ்லிம் ஆசிரியர் எழுதியுள்ளார். லேபன் என்னும் பிரெஞ்சு ஆசிரியர் தமது அறேபியர் நாகரீகம் என்னும் நூலில் இதைக் குறிப்பிட்டுள்ளார்" என்கின்றார்[5].

மேற்குறிப்பிட்ட அறபு இந்தியத் தொடர்பின் நீட்சியாகவே இந்தியாவுக்கு இஸ்லாத்தின் அறிமுகம் ஏற்படுகிறது. கி.பி ஏழாம் நூற்றாண்டில் அறேபியத் தீபகற்பத்தில் இஸ்லாம் தோற்றம் பெற்றது முதல் குறுகிய காலத்தில் அது ஒரு ஆடசியாகவும் வடிவம் எடுக்கிறது. மதீனாவில் தோற்றம் பெற்ற ஆட்சி, ரோம் மற்றும் பாரசீகப் பேரரசுகளை வென்று ஷாம், ஈரான் ஈராக் போன்ற பிரதேசங்களிலும் பரவுகிறது. மறுபுறத்தில் வட ஆபிரிக்காவையும் வென்று அங்கும் இஸ்லாம் பரவுகிறது. மற்றொரு வகையில் சொன்னால், இந்திய வியாபாரத் தொடர்புகள் காணப்பட்ட பொரும்பாலான அறபு பாரசீகப் பிரதேசங்கள் இஸ்லாத்திற்குள் நுழைந்து விடுகின்றன. அதனால் இந்திய வியாபாரத்திற்கு வந்த அறபு மற்றும் பாரசீகர்கள் இப்பொழுது தனித்து வியாபாரப் பொருட்களுடன் மாத்திரமன்றி புதிய நம்பிக்கையையும் வாழ்க்கை முறையையும் சுமந்து வந்தார்கள். தாரா சந்த் அவர்கள் குறிப்பிடுவது போல், முஸ்லிம்கள் ஒவ்வொருவரும் இஸ்லாத்தை எத்திவைக்கும் பிரச்சாரகர்கள்தான். எனவே அவர்கள் சென்ற இடங்களில்எல்லாம் தமது புதிய மார்க்கத்தின் சிறப்பையும் பெருமையையும் எடுத்துரைத்திருக்கிறார்கள்[5]. இஸ்லாத்தில் இருந்த ஏக தெய்வக் கொள்கை, சமத்துவம் போன்ற தத்துவங்கள் இந்திய மக்களை இயல்பாகவே கவரக் கூடியனவாகக் காணப்பட்டன. எற்கனவே ஜாதி வேற்றுமையின் கொடுமைகளால் பாதிக்கப்பட்டிருந்த இந்திய மக்கள் விரைந்து இந்த புதிய மார்க்கத்தின் பால் ஈர்க்கப்பட்டதில் ஆச்சரியம் ஏதுமிருக்கவில்லை.

கி.பி ஏழாம் நூற்றாண்டுகளின் இறுதியில் இந்தியாவின் மலையாளக் கரையோரங்களில்தான் இஸ்லாம் முதன் முதலில் அறிமுகமாகியிருக்கிறது. அறபு மற்றும் பாரசீகர்கள் மலையாளக் கரையோரங்களின் பல பகுதிகளில் குடியேறி வாழ்ந்தார்கள். அவர்கள் சுதேசப் பெண்களைத் திருமணம் செய்தார்கள். அறபு முஸ்லிம் குடிகள் மலையாளத்தைப் பொருத்தவரையில் மிகவும் முக்கியமான பெரிய சமூகமாகக் காணப்பட்டனர். உள்நாட்டு அரசுகளும் இந்த வியாபாரிகளுடன் நீண்ட காலம் முதல் நற்புறவுடனேயே செயற்பட்டு வந்திருக்கிறது. மலையாளக் கரைகளில்தான் முதன் முதலில் முஸ்லிம்கள் குடியேறினார்கள் என்பதை தாரா சந்த் அவர்கள் ரோலண்டஸன், பிரான்ஸிஸ் டீ, ஸ்டோக் போன்ற வரலாற்றாசிரியர்களை மேற்கோள் காட்டி நிறுவுகிறார்[6].

மலையாள மன்னன் இஸ்லாத்தைத் தழுவியமை

மலையாளத்தில் இஸ்லாம் அறிமுகமானமை தொடர்பில் பேசுகின்ற பொழுது, அங்கு ஒரு மன்னர் இஸ்லாத்தைத் தழுவியமை பற்றிய பரவாலான ஒரு கதை காணப்படுகிறது. இந்தக் கதையை மிகவும் விரிவாக ஹி. 991ல் மரணித்த, மலையாளத்தில் வாழ்ந்த சிறந்த சூபி அறிஞர்களில் ஒருவரான ஷெய்க் அஹ்மத் ஸைனுத்தீன் அல்மலபாரி அவர்கள் தனது துஹ்பதுல் முஜாஹிதீன் என்னும் நூலில் விளக்குகிறார். அதாவது, கொடுங்கலூர் என்னும் நகரத்திற்கு சில யூதர்களும் கிறிஸ்தவர்களும் தமது குடும்பத்துடன் வந்து அங்கு தங்குவதற்கு மன்னனிடம் அனுமதி கேட்ட பொழுது, அவர்களுக்கு நிலங்களை வழங்கி தங்குவதற்கு அனுமதித்தான். அதற்கு சில வருடங்களுக்கு பின்னர் ஒரு ஷெய்கினது தலைமையில் முஸ்லிம்கள் குழுவொன்று, இலங்கையில் உள்ள பாவத மலையைத் தரிசிக்க வரும் வழியில் அங்கு வந்து இறங்கினர். அவர்களை மன்னர் வரவேற்று உபசரித்து, அவர்களது விபரங்களைக் கேட்டறிந்தார். அவர்கள் தமது புதிய மார்க்கம் குறித்தும் அதன் தூதுவர் குறித்தும் அவர்

சந்திரனைப் பிளந்த அதிசயத்தையும் எடுத்து விளக்கினார்கள். இதனால் கவரப்பட்ட மன்னன் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டு, அவர்கள் இலங்கையில் இருந்து திரும்பி வரும் வழியில் மீண்டும் இங்கு வரவேண்டும் எனவும் அவர்களுடன் தானும் வரத்தயாராக இருப்பதாகவும் தெரிவித்தான். அவர்கள் திரும்பி வந்த பொழுது, மன்னன் தனது அரச பெறுப்பை அரச பிரதானிகளிடம் தெளிவாக பிரித்து ஒப்படைத்து விட்டு மிகவும் இரகசியமாக அந்த முஸ்லிம்களுடன் கப்பலில் அறபு நாட்டை நோக்கிப் பயணமானான். யமன் பிரதேசத்தின் ஷிஹர் என்னும் துறைமுகத்தில் இறங்கி, அங்கு சிறிது காலம் இருந்தான். மலையாளத்தில் இஸ்லாத்தைப் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு குழுவைத் தயார் செய்து கொண்டு திரும்பி வரத்தயாரான நிலையில் மன்னன் நோய்வாய்ப்படுகிறான். ஆனால் அவன் தான் நியமித்த குழுவினரான ஷரப் இப்னு தீனார், மாலிக் இப்னு தீனார், மாலிக் இப்னு ஹபீப் ஆகியோரை கட்டாயமாக மலையாளத்திற்குச் சொல்லுமாறும் அங்கு மன்னனைச் சந்தித்து தான் தரும் ஓலையைச் சமர்ப்பிக்குமாறும், தனது சுகயீனம் அல்லது மரணம் குறித்து அவர்களிடம் எதுவும் சொல்ல வேண்டாம் எனவும் கூறினான். மன்னன் மரணித்து சில வருடங்களுக்குப் பின்னர் அவர்கள் மூவரும் தமது மனைவி மற்றும் பிள்ளைகளுடன் கொடுங்கலூர் வந்திறங்கினர். அப்போதிருந்த மன்னிடம் ஓலையைக் கொடுத்த பொழுது, மன்னன் அவர்களுக்கு நிலம் வழங்கி அவர்கள் இஸ்லாமிய பிரச்சாரத்தை மேற்கொள்ள பூரண சுதந்திரத்தையும் வழங்கினான். அவர்கள் கொடுங்களூர் மற்றும் மங்களூர் அதனைச் சுற்றியுள்ள பல பிரதேசங்களிலும் கிழக்கு நோக்கி சோழ மண்டலம் வரையில் இஸ்லாமிய பிரச்சாரத்தில் ஈடுபட்டு பல பள்ளி வாயல்களை அமைத்தார்கள். மாலிக் இப்னு தீனாரும் மாலிக் இப்னு ஹபீபும் தமது நாட்டுக்குத் திரும்பிச் சென்று, பின்னர் மாலிக் இப்னு ஹபீப் தனது மனைவி பிள்ளைகளுடன் மீண்டும் திரும்பி வந்து கொடுங்கலூரிலேயே வாழ்ந்து மரணித்ததாக அந்த வரலாறு தொடர்ந்து சொல்கிறது[8].

இந்த வரலாற்றைச் சொல்லிவிட்டு ஷெய்க் அஹ்மத் ஸைனுத்தீன் அவர்கள் இந்த மன்னனின் பெயர் ஸாமிரி என்றும் இந்த சம்பவம் நிகழ்ந்த காலம் குலபாஉர் ராஷிதூன்கள் காலமா அல்லது ஹி. இரண்டாம் நூற்றாண்டு காலமா என்பது உறுதியாகத் தெரியாது என்கிறார். இந்த சம்பவம் இஸ்லாத்தின் ஆரம்ப காலத்திலேயே நிகழ்ந்திருக்கிறது என்று மக்கள் மத்தியில் பரவலான கருத்துக்கள் இருக்கின்றன. ஆனால் அவை எதற்கும் உறுதியான ஆதாரங்கள் இல்லை என்கிறார். இது பிற்பட்ட காலத்தில் நிகழ்ந்த ஒன்று என்பதுவே நம்பக் கூடியதாக இருக்கிறது என்கிறார்[9].

இந்த மன்னனின் பெயர் சேரமான் பெருமாள் என்றும் சிலர் கூறுவர். இவரது பெயரில் இன்றும் ஒரு பள்ளிவாயல் மலையாளத்தில் காணப்படுகிறது. சேரமான் பெருமாள் இஸ்லாத்தைத் தழுவிய பின்னர் தனது பெயரை அப்துல் ரஹ்மான் ஸாமிரி என்று மாற்றிக் கொண்டதாகக் குறிப்பிடுவர். ஸாமிரி என்பது அவரது குடும்பப் பெயராகும். ஸாமரீக்கள் என்னும் ஒரு குடும்பத்தினர் அங்கு அண்மைய நாட்கள் வரையில் வாழ்ந்திருக்கின்றனர். அவர்களிடத்தில் பழைய பாரம்பரிய வழக்கத்தின்படி ஒருவர் அரச பொறுப்பை ஏற்கும் பொழுது, முஸ்லிம்கள் போல் ஆடையணிந்து, மாப்பிள்ளை எனும் முஸ்லிம் ஒருவரின் மூலமே முடிசூட்டு நிகழ்வும் நடைபெறும். அவர்கள் பதவியில் அமரும் போதும் கூட மக்காவுக்குச் சென்ற தமது மன்னர் திரும்பி வரும் வரையில் அவருக்குப் பகரமாகவே அரியணை ஏறுவதாக நம்புவர் என்று தாரா சந்த் அவர்கள் குறிப்பிடுகிறார். ஆனால் இந்த வரலாற்று சம்பவத்தை உறுதிப்படுத்துவதற்குப் போதுமான ஆதாரங்கள் இல்லை என்கிறார். மாத்திரமன்றி சேரமான் பெருமாள் என்பது இயற்பெயர் அன்றி அரச வம்சத்தின் பெயர் என்கிறார்[10].

ஆனால் டாக்டர் செய்யத் இப்றாகீம் அவர்கள், இதனை இரண்டு சம்பவங்களாகவே விளங்கப்படுத்துகிறார். அதாவது. மலையாளத்தில் வாழ்ந்த ஸாமிரி என்ற மன்னன் நபியவர்கள் சந்திரனைப் பிளந்த சம்பவத்தைப் பார்த்து விட்டு, அதனைப் பற்றித் தேடிய போது, அறபுப்

பிரதேசத்தில் ஒரு நபி தோன்றியிருக்கிறார் என்று அறிந்து, பின்னர் இஸ்லாத்தை ஏற்று நபியவர்களைச் சந்திப்பதற்காக இரகசியமாக அறபு நாடு நோக்கிச் சென்றதாகவும் திரும்பிவரும் வழியில் அவர் மரணித்து விட்டதாகவும் அவர் யமனில் ஷன்ஆவுக்கு அருகாமையில் ழிபார் என்னும் இடத்தில் அடக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும் குறிப்பிடுகிறார். இச்சம்பவத்தை ஃபரஷ்தா என்னும் பாரசீக முஸ்லிம் வரலாற்றாசிரியர் பதிவு செய்திருப்பதாகக் குறிப்பிடுகிறார். இந்த சம்பவத்திற்குப் புறம்பாக ஹி. இரண்டாம் நூற்றாண்டில் சேரமான் பெருமாள் இஸ்லாத்தைத் தழுவிய சம்பவம் நடைபெறுவதாகக் குறிப்பிடுகிறார். அவரது கருத்துப் படி இவை இரண்டும் வெவ்வேறு சந்தர்ப்பங்களில் நிகழ்ந்த சம்பவங்களாகும்[11].

கலாநிதி அப்துல் முன்இம் அந்நமிர் அவர்கள், இவை இரண்டு சம்பவங்கள் என்பதை விடவும் ஓரே சம்பவமாகவே பார்க்கிறார். இவற்றின் உண்மைத் தன்மையில் பாரிய பிரச்சினைகள் இல்லை. ஆனால் இவை நிகழ்ந்த காலப்பகுதி தொடர்பில்தான் தெளிவற்ற நிலை காணப்படுகிறது என்கிறார். ஏனெனில் முதல் சம்பவம் நபியவர்கள் காலத்தில் நகழ்ந்தது என்பதனை ஃரஷ்தா என்னும் பாரசீக வரலாற்றாசிரியர் விரிவாக முன்வைத்திருக்கிறார், அத்துடன் இந்திய வரலாறு தொடர்பில் இரண்டு கையெழுத்துப் பிரதிகளிலும் இந்த வரலாறு விரிவாக விளக்கப்பட்டுள்ளது என்கிறார். ஆனால் பின் வந்த பலர் இது இரண்டாம் நூற்றாண்டில் நிகழ்ந்தது என்பதையே மிக ஆதார பூர்வமானதாகக் கொள்கின்றனர். எது எப்படி இருந்தாலும் இரண்டாம் நூற்றாண்டிற்கு முன்னரே மலையாளத்திற்கு இஸ்லாம் அறிமுகானது என்பது மிகவும் ஆதார பூர்வமானது. கடல் வழி வியாபாரிகள் மூலம் அது நடைபெற்றிருக்கிறது. மலையாளத்தை விடவும் தொலைவில் உள்ள இலங்கைக்கும் இவர்கள் மூலமாகவே இஸ்லாம் அறிமுகமானமை பற்றிய குறிப்புக்கள் இருக்கின்றன. எனவே மலையாளத்திலும் ஆரம்ப நாட்களிலேயே இஸ்லாம் அறிமுகமாகியமை உறுதியானது. ஆனால் வரலாற்றைப் பொருத்தவரையில் தனிமனித நிகழ்வுகளை விடவும் மன்னர்களது நிகழ்வுகளுக்கு அதிக முக்கியத்துவம் தருவதால்தான் இந்த மன்னின் சம்பவம் இந்தளவு முக்கியத்துவம் பெற்றிருக்கிறது என்கின்றார்[12].

கலாநிதி அப்துல் முன்இம் அந்நமிர் குறிப்பிடுவது போல், முஸ்லிம்களுக்குப் பொதுவாக மன்னர்களிடம் பெரும் மதிப்பும் மரியாதையும் இருந்து வந்தது. அதனால் முஸ்லிம்கள் மாப்பிள்ளை (மணமகன்) என்று அழைக்கப்பட்டனர். அலி ராஜா என்ற ஒரு முஸ்லிம் குடும்பம் சேரமான பெருமாள் மன்னனுடன் நெருங்கிய தொடர்பில் இருந்தனர். அவர்களில் இருந்துதான் அரச பிரதானிகள் அமைச்சர்கள் கடல்வழித் தளபதிகள் தோன்றினர். அவர்கள் ஒரு நிலப்பகுதியையும் ஆண்டனர். அவர்களது பரம்பரையில் கடைசி இளவரசி 1957 ல் மரணித்ததாகக் கூறுகிறார். அந்தக் குடும்பத்தை தான் சந்தித்ததாகவும் இந்திய சுதந்திரத்துடன் அவர்களது செல்வாக்கு அற்றுப் போனது என்றும் குறிப்பிடுகிறார். இவர்களைப் பலப்படுத்தும் வகையில் பொதுவாக மக்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்வதற்கு மன்னர் தூண்டுதல் அளித்ததாகவும் கூறுகிறார். ஒவ்வொரு வீட்டிலும் குறைந்தது ஒரு பிள்ளையை முஸ்லிமாக வளர்க்க வேண்டும் என மன்னர் கட்டயிட்டுள்ளார். ஒரு முஸ்லிம் உருவாக்கிய சந்தைதான் காலப்போக்கில் கல்லிகட் என்ற பெரு நகரமாக மாறியுள்ளது என்கிறார்[13].

மேற்குறிப்பிட்ட வாதங்களைப் பார்க்கின்ற பொழுது, ஒரு மன்னர் இஸ்லாத்தைத் தழுவியுள்ளார் என்ற சம்பவத்தை மறுதலிப்பது சிரமமானது என்று புரிகிறது. ஆனால் அது நிகழ்ந்த காலம் எதுவாகவும் இருக்கலாம். மலையாளத்தில் இஸ்லாம் தனிமனிதர்களால் அறிமுகப்படுத்தப்பட்டு அரச ஆதரவுடன் அங்குள்ள சுதேசிகளாலும் பிரச்சார நோக்கில் வருகை தந்தவர்களாலும் வளர்க்கப்பட்டிருக்கிறது எனப்தையும் புரிந்து கொள்ள முடிகிறது. ஆயுதம் ஏந்திய போராட்டத்தின் ஊடாக இஸ்லாம் அங்கு முதன் முதலில் அறிமுகமாகவில்லை என்பதையே அது குறிக்கிறது. இதனைத் தான் பண்டித ஜவஹர்லால் நேரு உடைய இந்தக் கூற்று

உணர்த்துகிறது. “இஸ்லாம் ஒரு அரசியல் சக்தியாகப் பாரதத்திற்குள் நுழைவதற்குச் சில நூற்றாண்டுகளுக்கு முன்பே இஸ்லாம் ஒரு மார்க்கம் என்ற முறையில் இந்தியாவின் தென்பகுதியை அடைந்து விட்டது” என்கிறார்[14].

இஸ்லாம் ஒரு ஆட்சியாக அறிமுகமானமை

இஸ்லாம் ஒரு ஆட்சியாக அறிமுகமானமை என்ற தலைப்பின் மூலம் நாடப்படும் கருத்து என்னவெனின், இஸ்லாம் ஆரம்பத்திலேயே இந்தியாவின் தென்பகுதியில் அறிமுகமான பொழுதிலும் அது ஆட்சி வடிவமொன்றுக்குச் செல்லவில்லை. இயல்பான சமாதான சமூக வாழ்வொன்றாகவே இஸ்லாம் இருந்தது. ஆனால் இந்தியாவின் வடபகுதிக்கு முகம்மத் பின் காஸிமின் தலைமையில் நடைபெற்ற படையெடுப்பைத் தொடர்ந்து இஸ்லாம் அங்கு ஒரு ஆட்சி வடிவத்திலேயே மக்களுக்கு அறிமுகமாகிறது. முஸ்லிம்கள் வெற்றியாளர்களாகவே அந்த மக்களுக்கு அறிமுகமாகிறார்கள். ஆனால் தென்பகுதியில் முஸ்லிம்கள் சாதாரண பொதுமக்களாகவே அந்த மக்களுக்கு அறிமுகம் ஆனார்கள். இந்த இரு வகை அறிமுகங்களினதும் தாக்கத்தில் வேறுபாடுகள் இருக்கின்றன.

ஆனால் இங்கு முக்கியமாகப் புரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்னவெனின், பலர் இந்தியாவுக்கு இஸ்லாம் முதன் முதலில் இந்த ஆயுதப் போராட்டத்தின் மூலமே வந்தது எனவும், அவர்கள் நாடு பிடிக்கும் நோக்கில் வந்து சொத்துக்களைச் சூரையாடிச் சென்றார்கள் என்ற ஒரு கருத்து மாத்திரமே முன்வைக்கப்படுகிறது. இதனால் இஸ்லாம் என்பது இந்தியாவில் அதிகாரத்தின் மூலம் திணிக்கப்பட்ட ஒன்று எனவும், முஸ்லிம்கள் என்போர் காட்டுமிரண்டிகள் என்றும் ஒரு கருத்து கட்டமைக்கப்படுகிறது. ஆனால் உண்மை அதுவல்ல, இஸ்லாம் முன்வைக்கும் பொதுக் கொள்கைக்கு அமையவே இந்தியாவிலும் எந்த நிர்பந்தமும் இன்றி மக்கள் இயல்பாகவே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்ட ஒரு நிலையே காணப்பட்டது என்பதையும், இந்தியாவுக்கு எதிரான படையெடுப்பு நியாயமான அரசியல் காரணங்களால் நிகழ்ந்த ஒன்று என்பதையுமே இந்தப் பத்தி பேச விளைகிறது.

சிந்து கைப்பற்றப்பட முன்னர்

டாக்டர் செய்யத் இப்றாகீம் அவர்கள் சிந்துப் பிரதேசம் ஆயுத ரீதியாகக் கைப்பற்றப்பட முன்னர், அங்கு இஸ்லாம் அறிமுகமாகியிருந்தது என்கிறார். அதாவது, சிந்துவில் வாழ்ந்த ஜாட் இனத்தவர்கள் இஸ்லாத்தைத் தழுவி, இந்தியாவிலிருந்து ஈராக் சென்று வாழ்ந்திருக்கிறார்கள், முஸ்லிம்கள் பாரசீகர்களுக்கு எதிராக போர் தொடுத்த பொழுது, இவர்கள் முஸ்லிம்களுடன் இணைந்து பாரசீகர்களுக்கு எதிராக போரிட்டிருக்கிறார்கள். யுத்த களத்திலிருந்து ஓடாமல் இருக்க கால்களில் சங்கிலிகளைப் பிணைத்துக் கொண்டு போராடும் வழமை ஜாட் இனத்தவரிடம் காணப்பட்டிருக்கிறது. சங்கிலி யுத்தத்தில் கால்களில் சங்கிலிகளைப் பிணைத்துக் கொண்டு போராடியவர்கள் இவர்களாக இருக்க முடியும் என்கிறார்[15]. இந்த சம்பவத்தைப் பார்க்கின்ற பொழுது, இந்தியாவில் வடக்கிலும் தெற்கிலும் இஸ்லாத்தின் பொதுவான அறிமுகம் அதன் இயல்பான பிரச்சாரத்தின் மூலமே நிகழ்ந்திருக்கிறது, படையெடுப்பு என்பது இஸ்லாத்தை அறிமுகம் செய்வதற்கான ஒரு வழிமுறையாக இருந்ததில்லை என்பதை உணர முடிகிறது. எனவே யுத்தத்திற்கு அரசியல் ரீதியான காரணங்கள் மட்டுமே இருக்க முடியும்.

சிந்துப் படையெடுப்புக்கான காரணங்கள்

சிந்துவின் மீதான படையெடுப்பின் வரலாறு கலீபா உமர் (ரழி) அவர்கள் காலம் முதல் ஆரம்பிக்கிறது. கலாநிதி அலி ஸல்லாபி அவர்கள் பலாதூரியை மேற்கோள் காட்டி சிந்துவின் மீதான படையெடுப்புக்கான காரணங்களை பின்வருமாறு அடையாளப்படுத்துகிறார்[16].

1. முஸ்லிம்களுக்கும் பாரசீகர்களுக்கும் இடையில் நடைபெற்ற காதிஸிய்யா போரின் போது, பாரசீக மன்னன் பக்கத்து ராஜ்யங்களிடம் முஸ்லிம்களுக்கு எதிராக உதவி கோரினான். அப்பொழுது சிந்து மன்னன் படைவீரர்கள் மற்றும் பெரும் தொகையான செல்வங்களை வழங்கி உதவி செய்தான். இது சிந்துவின் மீது முஸ்லிம்கள் முதன் முதலில் படையெடுப்பு ஒன்றை நடாத்துவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்தியது.
2. கலீபா முஆவியாவின் காலத்தில் சிந்து ராஜ்யத்திற்கும் துருக்கியருக்கும் இடையில் சந்தேகத்திற்கு இடமான உடன்பாடுகள் எட்டப்பட்டிருந்தன. இது முஸ்லிம்களுக்கு அச்சுறுத்தலாக அமைந்தது. இந்திய நகரான கைகானில் பதினெட்டு துருக்கிய குதிரை வீரர்களை முஸ்லிம்கள் சந்தித்தமையின் அடிப்படையிலேயே இந்த சந்தேகம் வலுத்தது.
3. இந்தியர்களின் கடற்கொள்ளை நடவடிக்கைகள் அதிகரித்தமை மற்றொரு முக்கிய காரணம். அதிலும் குறிப்பாக இலங்கை மன்னன் இலங்கையில் மரணித்த அறபு வியாபாரிகளின் மனைவியர் மற்றும் பெண்மக்கள் உள்ளடங்களாக ஹஜ்ஜாஜ் பின் யூசுபுக்கு அனுப்பி வைத்த பரிசுப் பொருட்களை சிந்துக் கடற்பகுதியில் கடற்கொள்ளையர்கள் கொள்ளையிடுகின்றனர். அப்பொழுது யர்பூஃ கோத்திரத்தைச் சேர்ந்த ஒரு பெண், ஹஜ்ஜாஜே எங்களைக் காப்பாற்று என அபயக் குரல் எழுப்பியதை கேள்வியுற்ற ஹஜ்ஜாஜ், அவர்களை விடுவிக்குமாறு சிந்து மன்னன் தாஹரிடம் கேட்டுக் கொண்டார். ஆனால் தாஹர் அது கடற்கொள்ளையர்களின் வேலை, அது எனது கட்டுப்பாட்டில் இல்லை என மறுத்து விடவே அதற்கு எதிராக படையெடுக்கும் முடிவுக்கு ஹஜ்ஜாஜ் வந்தார்.

மேற்குறித்த காரணங்களுக்கு அப்பால் மற்றும் சில காரணங்களையும் கி. நெடுஞ்செழியன் குறிப்பிடுகின்றார். அதாவது, சிந்து மன்னன் சச்சு இறந்த பிறகு அவனது மகன் இந்திரன் மன்னனானான். அவன் பக்கத்து நாடுகளுடன் நல்லுறவைப் பேணியதால் முஸ்லிம்கள் சிந்து மீது படையெடுக்க நினைக்கவில்லை. ஆனால் சந்திரனுக்குப் பின்னர் அவனது சகோதரன் தாஹர் ஆட்சிக்கு வந்ததுடன் அவன் தனது ராஜ்யத்தை விரிவு படுத்த நினைத்தான். அதன் அடிப்படையில் முஸ்லிம்கள் வசமிருந்த கந்தஹார் மீது படையெடுத்தான். அதில் தோல்வி கண்ட பின்னர், சிந்துவின் மேற்கெல்லைப் பகுதியில் ஒரு கிளர்ச்சியை முஸ்லிம்களுக்கு எதிராகத் தூண்டி விட்டான். கிளர்ச்சியாளர்கள் அடக்கப்பட்டு விரட்டப்பட்ட பின்னர், அவர்களில் சிலர் சிந்து மன்னனிடம் தஞ்சம் புகுந்தனர். அவர்களுக்கு அவர்களது பகுதியை மீட்டுத் தருவதாக அவன் வாக்குறுதியும் வழங்கினான். இதுவும் சிந்துவின் மீது முஸ்லிம்கள் படையெடுக்கக் காரணமாகியது[17].

இத்துடன் தேபல் துறைமுகப்பகுதியில் கடற்கொள்ளைக்காரர்களுக்கு சிந்து மன்னனும் துணை நின்றதாகவும் அவர்கள் ஹஜ் யாத்திரிகர்களைக் கூட கொள்ளையிட்டுள்ளனர் என்றும் தாழை மதியவன் குறிப்பிடுகிறார்[18]. இதுவும் ஒருவகையில் சிந்துவின் மீதான படையெடுப்புக்குக் காரணமாகியிருக்கிறது.

அத்துடன் தாரா சந்தை மேற்கோள் காட்டி கலாநிதி அப்துல் முன்இம் அந்நமிர் அவர்கள் மற்றொரு காரணத்தையும் முன்வைக்கிறார். அதாவது, பனூ ஹாஷிம்களில் ஒரு பிரிவினர் ஹஜ்ஜாஜிடமிருந்து தப்பியோடி சிந்துப் பிரதேசத்திற்கு வந்த பொழுது, அவர்களைத் தருமாறு

ஹஜ்ஜாஜ் சிந்து மன்னனிடம் கோரியும் சிந்து மன்னன் உடன்படாமையாலும் இந்தப் படையெடுப்பு நிகழ்ந்திருக்கிறது என்கிறார்[19].

மேற்குறித்த காரணங்களை நோக்குகின்ற பொழுது, இவை அனைத்தும் மத ரீதியான காரணங்கள் அன்றி அரசியல் ரீதியான காரணங்களாகவே காணப்படுகின்றன. அதிலும் முஸ்லிம்கள் தமது பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்ற நிலையிலும் தமது மக்கள் மீது நடைபெற்ற அநியாயமான அத்துமீறலின் காரணமாகவும் சிந்து மீது போர்த்தெடுத்திருக்கிறார்கள். மாற்றமாக ஆங்கிலேயர்கள் எழுதிவைத்தது போல் நாடு பிடிப்பதோ அல்லது மத ஆதிக்கமோ இதற்குப் பின்னால் நோக்கமாக இருக்கவில்லை.

சிந்துப் படையெடுப்பு

ஏலவே குறிப்பிடப்பட்டது போல், சிந்து மீதான படையெடுப்பின் வரலாறு கலீபா உமர் (ரழி) அவர்களது காலம் வரை செல்கிறது. காதிஸிய்யாப் போரில் சிந்து மன்னன் பாரசீகர்களுக்கு உதவியதற்கு பழிவாங்கும் வகையில் கலீபா உமர் காலத்தில் பஹ்ரைன் மற்றும் ஓமான் பகுதிகளுக்கு கவனராக நியமிக்கப்பட்ட உஸ்மான் இப்னு அபில் ஆஸ் அஸ்ஸகபி அவர்கள் தனது சகோதரரான அல்ஹகம் இப்னு அபில்ஆஸ் அவர்கள் தலைமையில் இந்தியாவின் தற்போதைய மும்பாய்க்கு அருகாமையில் இருக்கும் தானா என்னும் இடத்திற்கு ஒரு படையை அனுப்பி வைத்தார். அதுபோல் முகீரா இப்னு அபில்ஆஸ் அவர்களை தேபல் துறைமுகத்திற்கும் ஒரு படையுடன் அனுப்பி வைத்தார். அவர்கள் வெற்றியுடன் திரும்பி வந்ததன் பின்னர், அது குறித்து கலீபா உமரவர்களிடம் அறிவித்த பொழுது, கடல் வழிப் போராட்டத்தை உமரவர்கள் விரும்பாததன் காரணமாக அதனைத் தொடருவதற்கு அனுமதிக்கவில்லை. ஆனால் சிந்துவுக்கான தரைவழி மார்க்கத்தைக் கண்டறிவதற்கான முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. கலீபா உஸ்மான் (ரழி) அவர்களது காலத்தில் ஹகீம் இப்னு ஜப்லா அல்அப்தீ அவர்களை தகவல் அறிவதற்காக அனுப்பினார். அவரது தகவலின் படி அங்கு படையெடுப்பது தற்போது சாதகமாக இல்லை என்ற வகையில் படையெடுப்பு நடாத்தப்படவில்லை. பின்னர் அலி (ரழி) அவர்கள் காலத்தில் அல்ஹாரிஸ் இப்னு முர்ரா அல்புஃதி அவர்கள் ஒரு படையுடன் சென்று சிறு வெற்றியுடன் திரும்பினார்.

அடுத்து கலீபா வலீத் பின் அப்துல் மலிக் அவர்கள் காலத்தில் ஈராக்குக்கு கவர்னராகக் காணப்பட்ட ஹஜ்ஜாஜ் பின் யூசுப் அவர்கள், ஏலவே குறிப்பிடப்பட்ட கடற்கொள்ளைச் சம்பவம் நடைபெற்ற பின்னர், உபைதுல்லாஹ் இப்னு நப்ஹான் என்பவரின் தலைமையில் ஒரு படையை தேபலுக்கு அனுப்பினார். அந்தப் படை தோல்வியடைந்தது. பின்னர் புதைல் இப்னு தஹ்பா அல்பஜலி என்பரது தலைமையில் அனுப்பப்பட்ட படையும் தோல்வி கண்டது. அதன் பின்னர் தனது சகோதரரின் மகனான வெறும் பதினெட்டு வயதேயான முகம்மத் பின் காஸிமின் தலைமையில் ஒரு படையை அனுப்பி சிந்துவை வெற்றி கொண்டு, மன்னர் தாஹரை கொலை செய்கின்றார். தேபல், நேரூன், பிரஹ்மனாபாத் போன்ற முக்கிய நகரங்களைக் கைப்பற்றி சிந்து முழுவதையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் முகம்மத் பின் காஸிம் கொண்டு வருகிறார். சிந்துப் பகுதிக்கு அவரே கவர்னராக இருந்து ஆட்சி செய்கிறார். மூன்று வருட நல்லாட்சிக்குப் பின்னர் அவர் அநியாயமாக கலீபா சுலைமானினால் கொல்லப்பட்டார். சிந்துவை விட்டு முகம்மத் பின் காஸிம் வெளியேறும் பொழுது, மக்கள் அழுது தமது கவலையை வெளிப்படுத்தினர் என்று வரலாறு கூறுகிறது.

சிந்துவின் மீதான படையெடுப்பும் அதனைத் தொடர்ந்து வந்த கஸ்னவீக்கள், கோரீக்கள், மொகலாயர்களின் ஆட்சியும் இந்தியாவில் இஸ்லாத்தின் பரவலுக்கு பெரிதும் காரணமானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சிந்துப் படையெடுப்பின் காரணமாகவே இஸ்லாம் முதன் முதலில் அறிமுகமானது என்பது தவறான வாதமாகும். மாத்திரமன்றி சிந்துப் படையெடுப்பு மத

ஆதிக்கத்திற்காக நடைபெற்ற ஒரு யுத்தமும் அல்ல என்பதை நாம் கடந்த பத்திகளின் மூலம் விளங்குகிறோம்.

அடிக்குறிப்புக்கள்

1. செய்யத் சுலைமான் நத்வி, மெ.பெ.அஹ்மத் முஹம்மத் அப்துல் ரஹ்மான், அல் அலாகாத் அல் அரபிய்யா அல் ஹின்தியா, ப.13.
2. கி. நெடுஞ்செழியன், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், சென்னை, இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 2018, ப.50.
3. மேற்படி, ப.49.
4. தாரா சந்த், அஷ்ஷகாபா அல்ஹின்தியா வவுஸூலுல் முஸ்லிமீன் இலல் ஹின்த், பக்.15-38. (கட்டுரையாளரது நேரடி வார்தைகளன்றி தேர்வு செய்யப்பட்ட பகுதிகள் மாத்திரமே இங்கு சுருக்கமாத் தரப்பட்டுள்ளன).
5. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, சென்னை, யுனிவர்ஷல் பப்லிஷர்ஷ், 2014, பா.1, பக்.9-11.
6. தாரா சந்த், அஷ்ஷகாபா அல்ஹின்தியா வவுஸூலுல் முஸ்லிமீன் இலல் ஹின்த், பக்.15-38.
7. மேலது.
8. அஹ்மத் ஸைனுத்தீன் அல்ம.ஃபரி அல்மலபாரி, துஹ்பதுல் முஜாஹிதீன் பீ அஹ்வாலில் புர்துகாலிய்யீன், பெய்ரூத், முஅஸ்ஸஸதுல் வபா, 1985, பக்.223-232.
9. மேலது.
10. தாரா சந்த், அஷ்ஷகாபா அல்ஹின்தியா வவுஸூலுல் முஸ்லிமீன் இலல் ஹின்த், பக்.15-38.
11. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.1, பக்.11-15.
12. அப்துல் முன்இம் அந்நமிர், தாரீகுல் இஸ்லாம் பில் ஹின்த், பெய்ரூத், அல்முஅஸ்ஸஸா அல்ஜாமிஇய்யா லித்திராஸாத் வந்நஷ்ர் வத்தெளஸீ.ஃ, 1981, பக்.93-94.
13. மேலது.
14. கி. நெடுஞ்செழியன், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், ப.50.
15. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.1, பக்.16-17.
16. அலி முகம்மத் முகம்மத் அஸ்ஸல்லாபி, அத்தெளலா அல்உமவிய்யா அவாமிலுல் இஸ்திஹார் வததாஇய்யாதுல் இன்ஹியார், இஸ்தன்பூல், தாருர் ரௌழா லித்திபாஆ வந்நஷ்ர் வத்தெளஸீ.ஃ, 2018, பக்.106-107.
17. கி. நெடுஞ்செழியன், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், ப.58.
18. தாழை மதியவன், முஸ்லிம் மன்னர்கள் ஆண்ட இந்தியா, ப.18.
19. அப்துல் முன்இம் அந்நமிர், தாரீகுல் இஸ்லாம் பில் ஹின்த், ப.104.

இந்தியாவில் முஸ்லிம்களின் ஆட்சி பற்றிய ஒரு பார்வை

இந்தியாவில் முஸ்லிம்களது ஆட்சியானது, கி.பி 710 ல் முகம்மத் பின் காஸிம் அவர்கள் சிந்தை வெற்றி கொண்டது முதல் கி.பி.1857 ல் இரண்டாம் பஹதூர் ஷாஹ் அவர்கள் ஆங்கிலேயர்களால் வீழத்தப்படும் வரையான சுமார் 1147 வருடங்கள் பாரம்பரியம் கொண்ட நீண்ட வரலாறாகும். இக்காலப்பகுதியில் அரேபியர்கள், ஆப்கானியர்கள், துருக்கியர்கள், மொங்கோலியர்கள் போன்ற பல்வேறு இனத்தவர்கள் இந்த ஆட்சிப் பாரம்பரியத்தின் பங்காளர்களாக இருந்திருக்கிறர்கள். அதுபோல் உமையா, அப்பாஸிய்யா, கஸ்னவீ, கோரி, மம்லூக், கில்ஜி, துக்லக், செய்யத், லோடி, மொகல் போன்ற பல்வேறு வம்சத்தினர் ஆட்சியை மேற்கொண்டிருக்கிறார்கள். அடுத்து இந்த ஆயிரம் வருட ஆட்சி பற்றிய ஒரு சுருக்க அறிமுகத்தைப் பெற்றுக் கொள்வோம்[1].

சிந்து ஆட்சி

சிந்துவில் முஸ்லிம்களது ஆட்சி ஹி. 92 ல் (கி.பி 710) ஆரம்பிக்கிறது. சுமார் 42 வருடங்கள் உமையா வம்சத்தின் ஆட்சி அங்கு நடைபெறுகிறது. உமையாக்களின் ஒரு மாஹாணமாக அது தொழிற்படுகிறது. பின்னர் சுமார் 93 வருடங்கள் நேரடியாக அப்பாஸிய்யா வம்சத்தினரின் ஆட்சியில் ஒரு மாஹாணமாகக் காணப்படுகிறது. அதன் பின்னர் அப்பாஸிய ஆட்சிக்குக் கட்டுப்பட்டுக் காணப்பட்டாலும் சுயாதீனமான இரு சிற்றரசுகள் அங்கு இயங்கின. ஒன்று முல்தான் சிற்றரசு மற்றையது மன்சூரா சிற்றரசு. கி.பி 979 ல் கஸ்னவீக்கள் ஆட்சி ஆரம்பிக்கும் வரை சுமார் 269 வருடங்கள் அங்கு அரேபியர்களின் ஆட்சி நடைபெற்றது. இக்காலப்பகுதி சிந்து ஆட்சியில் பெரும்பாலும் உமையா மற்றும் அப்பாஸிய சாயலே அதிகம் காணப்பட்டது.

கஸ்னவீ ஆட்சி

கி.பி 979 முதல் இந்தியாவில் கஸ்னவீக்கள் ஆட்சி ஆரம்பமாகிறது. இவர்கள் துருக்கிய ஆப்கானிய இனத்தவர்கள். இவர்களது ஆட்சியைப் பொருத்தவரையில் பாரசீகத்தை ஆண்ட ஸமண்டீக்கள் மற்றும் அறபுக்கள் கலந்த ஒரு ஆட்சியாகக் காணப்பட்டது. ஏனெனில் இவர்கள் சுயாதீனமான ஒரு ஆட்சியாகக் காணப்பட்டாலும் அப்பாஸியக் கிலாபத்தை விட்டும் அவர்கள் வெளிச் செல்லவில்லை. அப்பாஸியக் கிலாபத்துடன் மிக நெருங்கிய உறவைப் பேணியது மாத்திரமன்றி கலீபா அல் காதிர் பில்லாஹ் அவர்களது காலத்தில் கிழக்குப் பகுதியின் அப்பாஸியப் பிரதிநிதிகளாக அங்கீகரிக்கப்பட்டனர். கஸ்னவீக்களது ஆட்சியில் அப்பாஸிய மற்றும் பாரசீக ஸமண்டீக்களது பாரம்பரியங்கள் கலந்த ஆட்சிமுறைமை ஒன்று காணப்பட்டது. இவர்களது 169 வருட கால ஆட்சி கி.பி 1148 உடன் நிறைவு பெற்றது. சுமார் 19 ஆட்சியாளர்கள் கஸ்னவீக்களில் ஆட்சி செய்திருக்கிறார்கள்.

கோரி ஆட்சி

கி.பி 1148 முதல் கி.பி 1215வரையான சுமார் 67 வருடங்கள் மாத்திரமே கோரீக்களது ஆட்சி இந்தியாவில் காணப்படுகிறது. இக்காலப்பகுதியில் சுமார் 8 பேர் பிரதானமாக ஆட்சி செய்திருக்கிறார்கள். இவர்களும் ஆப்கானிய இனத்தவராவர். இவர்களது ஆட்சி ஆரம்பத்தில் அப்பாஸியர்களுடன் நெருக்கமான உறவில் காணப்படாவிட்டாலும் பிற்பட்ட காலத்தில் கியாஸுத்தீன் அபுல் பத்ஹ் முகம்மத் இப்னு ஸாம் அல் கோரியுடைய ஆட்சியின் போது, அப்பாஸியர்களால் உத்தியோகபூர்வமாக அங்கீகரிக்கப்பட்டனர்.

மம்லூக்கியர் ஆட்சி

இந்தியாவில் மம்லூக்கியர் ஆட்சி என்பது, தில்லி சுல்தான்கள் என்று பிரபல்யல்யமாக அறியப்படும் ஆட்சியாளர்களின் முதல் பிரிவினர் ஆவர். இவர்களது ஆட்சி கி.பி 1206 ல் ஆரம்பித்து 1290 வரையான சுமார் 84 வருட ஆட்சிக்காலமாகும். இக்காலப்பகுதியில் 10 ஆட்சியாளர்களின் கீழ் இவ்வாட்சி வழிநடாத்தப்பட்டிருக்கிறது. இதன் இஸ்தாபகரான குத்புத்தீன் அய்பக் என்பவர் கோரி ஆட்சியின் அடிமைகளில் ஒருவராக இருந்து தில்லியை வெற்றி கொண்டு அதன் ஆட்சியாளராக மாறுகிறார். அவர் அடிமையாக இருந்த ஒருவர் என்பதன் காரணமாக ஆரம்பத்தில் தன்னை சுல்தான் என்று அறிமுகப்படுத்திக் கொள்ளவில்லை. அதே நேரம் பக்தாதில் அப்பாஸியர்களுடனும் தொடர்புகள் பேணப்படவில்லை. ஆனால் அடுத்து வந்த ஷம்ஸுத்தீன் உல்துமிஷ் என்பவர் காலத்தில்தான் அப்பாஸியர்களுடனான உறவு ஏற்படுத்தப்பட்டு அவர்களது பிரதிநிதிகளாக அங்கீகாரம் கிடைக்கிறது. இக்காலத்தில் உல்துமிஷ்ஷின் மகளான ரழிய்யா என்ற பெண் ஆட்சியாளர் பொறுப்பேற்றமை குறிப்பிடத்தக்க ஒரு நிகழ்வாகும். ஆண்களின் ஆட்சிகளைப் பார்த்து வந்த மக்களுக்கு மிகுந்த நிர்வாகத் திறமையுள்ள ரழிய்யாவின் ஆட்சி ஒரு புதிய அனுபவத்தைக் கொடுத்தது. இக்காலப்பகுதியில்தான் குவாரஸ்மிய சிற்றரசின் ஊடாக தாத்தாரியப் படையெடுப்பு பக்தாதை நோக்கி நடைபெற்றது. அப்பாஸிய ஆட்சி சின்னபின்னமாக்கப்பட்டது. மேற்குடனான தொடர்பை இழந்து, இந்திய மம்லூக்கியர் ஆட்சி தனித்து விடப்பட்டது. பல்பனின் ஆட்சிக் காலத்தில் அவரது காணக்கியத்தால் இந்தியா மீதான தாத்தாரியர்களின் படையெடுப்பு நிகழவில்லை. எனினும் பக்தாதிலிருந்து தப்பியோடி வந்த பல கோத்திரங்களையும் குடும்பங்களையும் பராமரிக்க வேண்டிய நிலை மம்லூக்கிய ஆட்சியாளருக்கு ஏற்பட்டது. இது அவர்கள் எதிர்கொண்ட ஒரு புதிய சூழ்நிலையாகும். அப்பாஸியர்களின் ஆதரவை இழந்து நின்ற வேளையிலும் சில காலங்களாக அவர்களை கௌரவப்படுத்தும் வகையில் அப்பாஸியக் கலீபாவின் பெயரிலேயே இங்கு நாணயங்கள் வெளியிடப்பட்டன. எனினும் பல்பனின் ஆட்சியில் முழுமையான சுயாதீனமான ஒரு ஆட்சியாக இது காணப்பட்டது.

கில்ஜீக்கள் ஆட்சி

ஆப்கானியர்களான கில்ஜீக்கள் கி.பி 1290 முதல் 1320 வரையில் சுமார் 30 வருட காலம் ஆட்சி செய்தனர். சுமார் 06 ஆட்சியார்கள் கில்ஜீக்களில் தோன்றியிருக்கிறார்கள். இவர்கள் சுயாதீனமான இந்திய தில்லி ஆட்சியைக் கொண்டு சென்றவர்கள். அதிலும் குறிப்பாக அலாவுத்தீன் கில்ஜி தன்னை அனைத்து முஸ்லிம்களுக்குமான கலீபா என்றும் பிரகடனம் செய்தார். எனினும் இவர்களது ஆட்சியின் இறுதிக் கட்டத்தில் அப்பாஸிய ஆட்சியின் தொடராக எகிப்தில் நிலைகொண்ட மம்லூக்கியர் ஆட்சியுடன் தொடர்புகளைப் பேணினர்.

துக்ளக் ஆட்சி

கி.பி 1320 முதல் கி.பி 1414 வரையான சுமார் 94 வருடங்கள் இவர்களது ஆட்சி நடைபெறுகிறது. பிரதானமாக 09 ஆட்சியாளர்கள் இக்காலப்பகுதியில் ஆட்சி செய்கிறார்கள். இதன் இஸ்தாபகரான கியாஸுத்தீன் துக்ளக் ஷாஹ் அவர்கள் பல்பனுடைய அடிமைகளில் ஒருவராக இருந்து ஆட்சிக்கு வந்தவராவார். இவர்கள் தமது ஆட்சியின் ஆரம்பத்தில் சுயாதீனமாகத் தொழிற்பட்டு, தமது நாணயங்களை குலபாஊர் ராஷிதீன்கள் பெயரில் வெளியிட்டனர். எனினும் பின்னர் எகிப்திய மம்லூக்கியர்களது அங்கீகாரத்தின் கீழ் செயற்படத்துவங்கினர். அபுல் முழப்பர் பைரூஸ் ஷாஹ் துக்ளக் என்ற ஆட்சியாளரது காலத்தில் இஸ்லாமியக் கலைகள் பெரிதும் வளர்ச்சியடைந்தன. அவர் மிகுந்த மார்க்க ஈடுபாடு மிக்கவராக இருந்தார். துக்ளக் ஆட்சியின் பிற்பட்ட காலத்தில் மெங்கோலியர்களான தைமூர் லன்கினது படையெடுப்பு இந்தியாவை நோக்கி நடைபெற்றது. தில்லியின் சகஜ வாழ்வில் மிகப் பெரும்

அதிர்வை ஏற்படுத்திய நிகழ்வாக இது காணப்பட்டது. துக்ளக் ஆட்சி வீழ்ச்சியடைவதற்கு இந்தப் படையெடுப்பு முக்கிய காரணங்களில் ஒன்றாகக் காணப்பட்டது.

செய்யதுகள் ஆட்சி

கி.பி 1414 முதல் கி.பி 1451 வரையில் சுமார் 37 வருட இவர்களது ஆட்சியில் 04 ஆட்சியாளர்கள் ஆட்சிசெய்தனர். இவர்களது வம்சம் செய்யதுகள் என்று அழைக்கப்படுவதற்கான காரணம் இவர்கள் நபியவர்களது பரம்பரையைச் சோர்ந்தவர்கள் என்று கருதப்படுகிறது. தைமூரீக்களது படையெடுப்பின் பின்னர் கழிர் கான் என்பவர் அவர்களது பிரதிநிதியாக தில்லியில் நியமிக்கப்பட்டதன் பின்னர் அவரது தலைமையில் உருவாக்கப்பட்டதே செய்யதுகள் ஆட்சியாகும். குறிப்பிடத்தக்க அரசியல் சாதனைகளோ மாற்றங்களோ நிகழ்த்தப்படாத ஒரு காலமாகவே வரலாற்றாசிரியர்கள் இவர்களது காலத்தைக் கருதுவர். இவர்கள் தம்மை தைமூரிகளின் பிரதிநிதிகளாகவே ஆட்சி செய்தனர். அமீருல் மு.ூமினீனுடைய பிரதிநிதி என்று தம்மை இவர்கள் அழைத்துக் கொண்டனர். தாம் தைமூரிகளது பிரதிநிதிகள் என்பதையே இவ்வாறு குறிப்பிட்டுள்ளனர். இவர்களுக்கு எகிப்து மம்லூக்கியர்களுடன் குறிப்பிடத்தக்க எந்த உறவும் காணப்படவில்லை.

லோடிகள் ஆட்சி

லோடிகளின் ஆட்சி கி.பி 1451 முதல் கி.பி 1526 வரையான 75 வருடங்கள் கொண்ட ஆட்சியாகும். இவர்களில் பிரதானமாக 03 ஆட்சியாளர்கள் காணப்பட்டிருக்கிறார்கள். இவர்கள் ஆப்கானியர்களாவர், செய்யது வம்ச ஆட்சியில் நம்பிக்கையிழந்த அரச பிரதானிகளே பஹ்லூல் லோடியிடம் தில்லியைக் கைப்பற்றுமாறு வேண்டினர். இதனடிப்படையிலேயே அவர் படையெடுத்து வந்து தில்லியில் லோடிகள் ஆட்சியை நிறுவுகிறார். கஸ்னவீ, கோரி, கில்ஜி போன்ற தமது பழைய ஆப்கானிய பாரம்பரியப் பெருமையை மீளவும் நிலைநாட்ட வேண்டும் என்ற உந்துதல் இவர்களிடமிருந்தது. இவர்கள் காலத்தில் எகிப்தில் மம்லூக்கியர் ஆட்சி உஸ்மானியர்களால் வீழ்த்தப்பட்டது. உஸ்மானியர்கள் இஸ்லாமிய உலகை தமது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வந்திருந்தனர். இந்தப் புதிய சூழ்நிலை இவர்களுக்கும் பல புதிய நெருக்கடிகளைக் கொண்டு வந்தது. அத்துடன் மத்தியாசியாப் பகுதியிலிருந்து மொங்கோலியர்களது படையெடுப்பும் இவர்களை நோக்கி வந்ததனால் லோடிகள் ஆட்சி வீழ்ச்சியடைகிறது.

மொகலாயர் ஆட்சி

மொகலாயர் ஆட்சி இந்தியாவில் கி.பி 1526 முதல் 1857 வரை சுமார் 331 வருடங்கள் நடைபெற்ற ஆட்சியாகும். சுமார் 17 ஆட்சியாளர்கள் மொகலாய வம்சத்தில் தோன்றியிருக்கிறார்கள். மொகலாயர்ஆட்சியில் ஏனைய ஆட்சிகளை விடவும் சிறப்பம்சமாகக் காணப்பட்ட ஒரு விடயம் என்னவெனின், பரம்பரை ஆட்சிமுறை குறிப்பிட்ட விதிகளுக்கு உற்பட்டு நடைபெற்றதை விடவும் ஒரு ஆட்சியாளர் தனது பிள்ளைகளில் பெரியவர் சிறியவர் என்ற வேறுபாடு பார்க்காமல் அவர்களில் மிகவும் பலமானவர் ஆட்சித் திறமையுள்ளவர் எவரோ அவருக்கே ஆட்சயை வழங்கும் முறைமை இருந்தது. இதனால் தொடர்ந்தும் அரச பரம்பரைக்குள் பிரச்சினைகள் இருந்து கொண்டேயிருந்தன. அவர்களது ஆட்சியை பலவீனப்படுத்திய காரணிகளில் ஒன்றாகவும் இதனை அடையாளப்படுத்துவர். இவர்கள் காலத்தில்தான் இந்தியா மீதான ஐரோப்பிய ஆக்கிரமிப்புகள் நிகழ்ந்த காலமாகும். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என தொடர்ந்தும் இந்த ஆக்கிரமிப்புகள் நடைபெற்றன. இறுதியில் ஆங்கிலேயரின் மூலம் மொகலாய ஆட்சி முழுமையாக வீழ்ச்சியடைந்து செல்கிறது.

மேற்குறித்த ஆட்சிகள்தான் மிக முக்கியமான ஆட்சிப் பரம்பரைகளாகும். இவை தவிர பல சிற்றரசுகள் ஆங்காங்கு காணப்பட்டிருக்கின்றன. அவை இடைப்பட்ட காலங்களிலும் மொகலாயர்களுக்குப் பிற்பாடும் இருந்திருக்கின்றன. உதாரணமாக ஆப்கான்கள், பஹ்மனி சுல்தான்கள், தக்கண ராஜ்யங்கள், காஷ்மீர், வங்காளம், ஜௌன்பூர், குஜராத், மாவளம் போன்ற பல சிற்றரசுகள் காணப்பட்டிருக்கின்றன. அத்துடன் மதுரை சுல்தான்கள், ஆற்காடு நவாப்கள் போன்றவற்றையும் குறிப்பிடலாம். இவையனைத்தும் இந்திய முஸ்லிம் ஆட்சியின் நீண்ட கால வரலாற்றைக் குறிப்பனவாகும்.

இந்த ஆயிரம் வருட ஆட்சிப் பாரம்பரியத்தை எவ்வாறு புரிந்து கொள்ள வேண்டும்.

இந்த ஆயிரம் வருட ஆட்சிப் பாரம்பரியம் குறித்த சரியான ஒரு பார்வையை நாம் விளங்கிக் கொள்வதற்கு இரண்டு முக்கிய உண்மைகளை முதலில் நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

1. இந்திய முஸ்லிம் ஆட்சி பிற்பட்ட கால முஸ்லிம் பரம்பரைகளாலேயே கட்டமைக்கப்பட்டிருக்கிறது. அதாவது, இஸ்லாத்தின் ஆட்சி வடிவத்தினுடைய அதி சிறந்த காலமாக அடையாளப்படுத்தப்படக் கூடிய முதல் முப்பது வருட கால ஆட்சியான குலபாஉர் ராஷிதீன்களது ஆட்சியையைப் பொறுத்தவரையில், அவர்கள் இஸ்லாத்தின் முதல் பரம்பரையினரால் கட்டமைக்கப்பட்ட ஆட்சியாகும். அந்தவகையில் இஸ்லாம் வலியுறுத்தும் சிறந்த ஆட்சி விழுமியங்கள் அங்கு அமுலில் இருந்திருக்கின்றன. ஆட்சியாளர்களது நேர்மை, மக்களது சிறந்த பங்கேற்பு என்பன அங்கு முக்கியமாய்க் காணப்பட்டிருக்கின்றன. இதற்கான முக்கிய காரணங்களில் ஒன்று அவர்கள் நபியர்களின் நேரடிக் கண்காணிப்பில் வளர்க்கப்பட்டவர்கள், இஸ்லாத்தை எந்த நிர்ப்பந்தமும் இன்றி விளங்கி விரும்பி ஏற்றுக் கொண்டவர்கள், உலக இலாபங்கள் தேவைகள் அவர்களது இஸ்லாத்திற்குப் பின்னால் இருக்கவில்லை. ஆனால் பிற்பட்ட காலங்களில் இந்த நிலைமைகளில் நிறைய மாற்றங்கள் ஏற்பட்டன. இஸ்லாத்தை எற்றுக் கொண்ட அனைவரும் எந்த நிர்ப்பந்தமும் இல்லாமல் அதனை விளங்கி விரும்பி ஏற்றுக் கொண்டார்கள் என்று சொல்வதற்கில்லை. அன்றைய யுத்த சூழ்நிலையால் ஏற்பட்ட அச்சம், அடிமைகளாக பிடிபட்டிருந்த தவிர்க்க முடியாத நிலைமை, அன்று இஸ்லாத்திற்கு இருந்த சொல்வாக்கு போன்ற பல காரணிகள் பலரது இஸ்லாம் ஏற்புக்குப் பின்னால் இருந்திருக்கிறது. இவ்வாறு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டவர்களிலும் சிறந்த இஸ்லாமிய வாழ்வை பேணியவர்கள் இருக்கிறார்கள் என்பதை மறுப்பதற்கில்லை. எனினும் இஸ்லாத்தில் முறையாகத் தன்னைப் பயிற்றுவித்துக் கொள்வதற்கு அவகாசம் அமையாதவர்களும் கணிசமானவர்கள் இருக்கிறார்கள். இவர்கள் பல சமயங்களில் ஆட்சிக் கட்டிலில் அமர்கின்ற சந்தர்ப்பம் ஏற்பட்டிருக்கின்றது. எனவே பிற்பட்ட கால ஆட்சிப் பரம்பரைகள் என்று சொல்கின்ற பொழுது, அனைவரும் இஸ்லாத்தில் தம்மை சிறந்து பயிற்றுவித்துக் கொண்டவர்கள் என்ற நிலையில் இருந்து மாத்திரம் அவர்களது வாழ்வை நோக்க முடியாது என்பதை நாம் முதலில் ஏற்றுக் கொள்ள வேண்டும்.
2. இஸ்லாமிய வரலாறு என்பது புனிதமானது அல்ல. அது நல்லது கெட்டது, சாதகம் பாதகம், வெற்றி தோல்வி என அனைத்தும் நிறைந்தது. அதிலும் இஸ்லாமிய அரசியல் வரலாற்றில் தவறுகளும் சறுக்கல்களும் ஏற்படுவதற்கான வாய்ப்பு நிறையவே இருக்கிறது. ஆனால் இஸ்லாம் புனிதமானது. அதாவது, அல்குர்ஆனும் ஹதீஸும் புனிதமானவை. அவை மனித நலனையும் நீதியையும் உண்மையையும் என்றும் நிலை நாட்டுவதற்குரியவை. அல்குர்ஆன் ஒரு போதும் தவறு விட மாட்டாது. ஆனால் அதனை

விளங்கும், அமுல் படுத்தும் மனிதன் தவறு விடுவான். இந்த வேறுபாட்டை நாம் மிகச் சரியாகப் புரிந்து கொள்ள வேண்டும். பல சமயங்களில் நாம் இஸ்லாத்தின் புனிதத்துவத்தை இஸ்லாமிய வரலாற்றுக்கு வழங்க முற்பட்டு விடுவோம். அதனால் எம்மையறியாமல் வரலாற்றின் தவறுகளையும் சரி காணவோ அல்லது நியாயப்படுத்தவோ முற்படுவோம். எனவே வரலாறு என்பது நல்லவற்றாலும் கெட்டவற்றாலும் கட்டமைக்கப்பட்டதுதான். அதில் நன்மைகளும் நிகழ்ந்திருக்கின்றன, தீமைகளும் நிகழ்ந்நதிருக்கின்றன. இதற்கு இஸ்லாமிய வரலாறும் விதிவிலக்கு அல்ல, என்ற உண்மைய நாம் கசப்பாக இருந்தாலும் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

மேற்சொல்லப்பட்ட இரண்டு உண்மைகளின் அடிப்படையில் ஆயிரம் வருட பாரம்பரியம் கொண்ட இந்திய முஸ்லிம் ஆட்சி வரலாற்றையும் நாம் இவ்வாறுதான் விளங்கிக் கொள்ள வேண்டும். அதில் சிறந்த ஆட்சியாளர்கள் வந்தது போல், அநியாயங்களிலும் தவறுகளிலும் ஈடுபட்ட பல ஆட்சியாளர்களும் வந்து போயிருக்கிறார்கள். உண்மையை உண்மையாய் ஏற்றுக் கொள்ளும் தைரியமும் நேர்மையும் எங்களிடம் அவசியம். வலிந்து மறுதலிக்கும் போலித்தன்மைக்கு நாம் நிர்ப்பந்தமாக தள்ளப்பட்டு விடக் கூடாது. வரலாற்றில் தவறுகள் ஆதாரபூர்வமாக அடையாளம் காணப்படும் பொழுது, அதனை ஏற்றுக் கொள்ள வேண்டும். எல்லா வரலாறுகளிலும் தவறுகள் நடந்திருக்கின்றன. உலகில் எந்த சமூகமும் இதற்கு விதிவிலக்கு அல்ல. எனவே ஒரு சமூகமாக வரலாற்றில் நடைபெற்ற தவறு ஒன்றுக்கு தற்போதைய முஸ்லிம் சமூகத்தைக் குற்றவாளிக் கூண்டில் நிறுத்தவும் முடியாது. தவறு நிழ்ந்தது என்பதை ஏற்றுக் கொண்டு அடுத்த கட்டம் செய்ய வேண்டியது என்ன என்பதனை நோக்கி நகர்வதே முக்கியமானது. ஒரு குற்ற மனோ நிலையோடு நாம் வாழவேண்டிய அவசியம் இல்லை. ஒரு சமூகமாக மன்னிப்பு கேட்க வேண்டிய நிலை இருப்பினும் அதனையும் நாம் செய்யலாம். அதிலும் தவறேதுமில்லை. ஏனெனில் இதுவும் கூட எல்லா சமூகங்களுக்கும் பொதுவானதே. எல்லா சமூகங்களுக்குமான ஒரு பொது விதியாக இருக்கின்ற பொழுது அதில் பிரச்சினை ஏதும் இல்லை.

மறுபுறத்தில் இந்திய முஸ்லிம் வரலாறு திட்டமிட்டு திரிபுபடுத்தப்படும் நிலையையும் நாம் அங்கீகரிக்கக் கூடாது. முஸ்லிம் வரலாற்றின் உண்மைத்தன்மை மக்கள் மன்றத்தில் தெளிவாக முன்வைக்கப்படல் வேண்டும். முஸ்லிம் ஆட்சியாளர்களது சாதனைகள், பங்களிப்புகள் என்பன கட்டாயமாக வெளிக் கொணரப்படல் வேண்டும். இது முஸ்லிம் சமூகத்திற்குச் செய்யும் சேவை என்பது மாத்திரமல்ல மனித வரலாற்றுக்குச் செய்யும் மிகப் பெரிய சேவை. ஏனெனில் வரலாற்றை மிகச் சரியாக அறிந்து கொள்வதும் அதனைப் பதிவு செய்வதும் தற்போதைய சமூகம் மிகச்சரியான முடிவுகளை எடுத்து முன்னோக்கிச் செல்வதற்குக் காரணமாக அமைகிறது. அதாவது, முஸ்லிம்கள் ஏன் தங்களது மிகச் சரியான வரலாற்றை வெளிப்படுத்த வேண்டும் என்பது, முஸ்லிம் சமூகம் தற்போது எதிர் கொண்டிருக்கும் அரசியல் மற்றும் சமூக இருப்பு சார்ந்த பிரச்சினையில் இருந்து வெளியில் வருவதற்காக என்பது முதலாவது விடயம். ஆனால் இந்தப் பணியின் பயன் நிச்சயமாக முஸ்லிம் சமூகத்துடன் மாத்திரம் சுருங்கியது அல்ல. அது முழு இந்திய சமூகத்திற்கும் பயனுள்ளது. இன,மதத் தேசியவாதங்களைத் தவிர்த்து, ஒரு சிறந்த இந்திய சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கும் நிச்சயம் இது வழிவகுக்கும்.

அடிக்குறிப்புக்கள்

1. அஹ்மத் முகம்மத் அல்ஜுவார்னா, அல்ஹின்த் பீ ழில்லிஸ் ஸியாதா அல்இஸ்லாமிய்யா திராஸா தாரீகிய்யா, இ.இ, முஅஸ்ஸஸது ஹமாதா லித்திராஸாத் அல்ஜாமிஇய்யா வந்நஷ்ர் வத்தெளஸீ,், தி.இ, பக்.18-39.

இந்தியாவில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கம்

இந்தியாவில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கத்தினை ஆராயும் போது, ஒரு உண்மையை நாம் மனம்கொள்ள வேண்டும். அதாவது, இந்திய மக்களின் வாழ்க்கையில் நேரடியாக இஸ்லாத்தின் நம்பிக்கைகள் மற்றும் போதனைகள் ஏற்படுத்திய தாக்கம் என்று ஒரு வகையை நோக்க முடியும். இதற்கு அப்பால் இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம்கள் பல்வேறு இனங்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்கள் என்ற வகையில் அவர்களது இனக் கலாச்சாரங்களின் ஊடாக ஏற்படுத்திய தாக்கம் என மற்றொரு வகையையும் நோக்க முடியும். இந்த இரண்டு வகையும் இணைந்துதான் இஸ்லாத்தின் தாக்கம் என்று பொதுவாக ஆராயப்படுகிறது.

ஒரு இனத்தின் கலாச்சாரத் தாக்கத்தையும் அவர்கள் முஸ்லிம்கள் என்ற காரணத்தினால் மாத்திரம் இஸ்லாத்தின் தாக்கம் என்று சொல்வது எந்தளவு பெருத்தமானது என்ற ஒரு கேள்வி தோன்ற முடியும். உண்மையில் அவ்வாறு சொல்வது தவறில்லை என்றுதான் சொல்ல வேண்டும். ஏனெனில் இஸ்லாத்தின் பிரதான நோக்கம் மனித நலனை நிலைநாட்டுவதாகும். எனவே மனித நலனை நிலைநாட்டக் கூடிய எதனையும் இஸ்லாம் தடைசெய்ய மாட்டாது. எனவே உலகில் மனித வாழ்வை அபிவிருத்தி செய்யக் கூடிய அறிவியல் மற்றும் அழகியல் கலைகளை இஸ்லாம் அனுமதித்தது மாத்திரமன்றி அவற்றில் ஈடுபடுமாறு முஸ்லிம்களைத் தூண்டுதல் அளித்தும் இருக்கின்றது. அந்தவகையில் ஒரு இனத்தின் கலாச்சாரத்தில் காணப்படும் நல்ல அம்சங்களை எப்பொழுதும் இஸ்லாம் தனக்குள்ளே ஈர்த்துக் கொள்ளும். அதனை அந்நியமானது என்று நோக்க மாட்டாது. அதனால், இந்தியாவை ஆட்சி செய்த முஸ்லிம்களில் அரேபியர், ஆப்கானியர், துருக்கியர், மொங்கோலியர், பாரசீகர் போன்ற பல்வேறு பிரிவினரினதும் மனித நலன் சார்ந்த இனக் கலாச்சாரங்கள் இஸ்லாத்தினுள் ஈர்க்கப்பட்ட நிலையில்தான் அவர்களது படையெடுப்புக்கள் இந்தியாவை நோக்கி நடைபெற்றிருக்கின்றன. எனவே அந்த கலாச்சார மரபுகள் இந்திய மனித வாழ்வில் ஏற்படுத்திய தாக்கத்தையும் இஸ்லாத்தின் தாக்கம் என்று சொல்வதில் தவறில்லை என்றே தோன்றுகிறது.

ஆனால், அவர்களது இஸ்லாத்தின் மீதான ஈடுபாட்டில் பலம் பலவீன நிலைகள் காணப்பட முடியும். இது மனித வாழ்வின் தவிர்க்க முடியாத நியதி. அவர்களது பலவீன நிலைகளில் அவர்களின் மூலம் பல்வேறு தவறுகள் நிகழ்ந்திருக்க முடியும். உண்மையில் நிகழ்ந்திருக்கிறது என்பதை மறுக்கவும் முடியாது. அந்தத் தவறுகளை இஸ்லாத்தின் தவறுகள் என்று அடையாளம் காட்டுவது பொருத்தமற்றது. ஏனெனில் இஸ்லாம் அடிப்படையில் அது நன்மைகளை, நலன்களை உள்ளீர்க்கிறது. ஆனால் தீங்குகளை ஒரு போதும், மார்க்கத்தின் ஒரு பகுதியாக உள்ளீர்த்துக் கொள்ள மாட்டாது. அதற்கு தூண்டுதல் அளிக்கவும் மாட்டாது.

இதன் மூலம் நன்மைக்குப் பொறுப்பேற்றலும் தவறுக்குப் பொறுப்பேற்காமையும் என்ற இரட்டை நிலைப்பாடு முன்வைக்கப்படவில்லை. மாற்றமாக நாம் இஸ்லாத்தின் தவறையும் இஸ்லாத்தை பின்பற்றும் மனிதர்களின் தவறையும் வேறுபடுத்திப் புரிந்து கொள்ள வேண்டும் என்ற உண்மையையே குறிப்பிட விரும்புகிறேன்.

அந்தவகையில் இந்தியாவில் இஸ்லாம் ஏற்படுத்திய தாக்கத்தை கீழ்வரும் கிளைத் தலைப்புக்களில் தெளிவுபடுத்தலாம் என்றிருக்கிறேன்.

சமய ரீதியான தாக்கங்கள்: இந்திய மனித வாழ்வில் இஸ்லாத்தின் போதனைகள் ஒரு சமயம் என்ற வகையில், எந்த வடிவங்களில் தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை

பல்வேறு கோணங்களில் அணுக முடியும், என்றிருப்பினும் இங்கு முக்கியமான மூன்று பரப்புக்களை மாத்திரம் உதாரணத்திற்காக அடையாளம் காட்டுகிறேன்.

1. **இஸ்லாத்தின் தௌஹீத் என்னும் ஏகதெய்வக் கொள்கை:** இஸ்லாத்தினுடைய ஏகதெய்வக் கொள்கை இந்திய சூழலின் நம்பிக்கைகளில் உண்மையில் பாரிய பாதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இதற்கான சிறந்த உதாரணம் இஸ்லாத்தின் ஆரம்ப வருகைக் காலத்தில் அதாவது சிந்து வெற்றி கொள்ளப்படுவதற்கு முன்னரே கேரளத்தில் வாழ்ந்த சங்கராச்சாரியார் என்பவர் இஸ்லாத்தின் ஏகதெய்வக் கொள்கையால் கவரப்பட்டு, அதனை இந்தியாவின் பல்வேறு இடங்களில் பரப்பும் பணியை மேற்கொண்டிருக்கிறார். இவரது பிரச்சாரப் பணிகளால் பல பொது மக்களும் அரச பிரதானிகளும் ஏன்? இளவரசர்களும் கூட கவரப்பட்டிருக்கிறார்கள்[1]. அதுபோல் ஏக தெய்வக் கொள்கை பெரிதும் தாக்கம் செலுத்திய மற்றோர் இடம், சீக்கிய மதமாகும். அதனை உருவாக்கிய குரு நானக் என்பவர் இஸ்லாத்தின் ஏகதெய்வக் கொள்கையால் பெரிதும் கவரப்பட்டிருந்தார். இவர் ஏகதெய்வக் கொள்கையை ஏற்றிருந்தார் என்பதுடன், முஸ்லிம்களையும் அதன் தலைவர்களையும் குறிப்பாக இஸ்லாத்தின் தூதுவரையும் மிகவும் கண்ணியப்படுத்துபவராக இருந்திருக்கிறார். இஸ்லாத்திற்கும் இந்து மதத்திற்கும் இடையில் இணைப்பை ஏற்படுத்த வேண்டும் என்று கடுமையாக உழைத்திருக்கிறார். சர்தார் என்று அழைக்கப்படும் சீக்கியர்களில் ஒருவர், அவர்களது புனித நூலான ஆதிகிரான்தின் ஒரு பகுதியாகக் கருதப்படும் பாரசீக மொழியில் அமைந்த ஒரு நூலின் கையெழுத்துப் பிரதியில் இருந்து இந்த உண்மைகளை வெளிக் கொண்டு வந்திருக்கிறார். அந்தக் கையெழுத்துப் பிரதி பிரான்ஸின் தேசிய வாசிகசாலையில் கண்டெடுக்கப்பட்டது[2].
2. **உருவச் சிலைகளை வணங்காமை:** இஸ்லாத்தில் உருவ வழிபாடு இல்லை. அதனை எந்தச் சந்தர்ப்பத்திலும் அது ஆதரித்ததில்லை. இதன் தாக்கம் இந்திய மக்களின் நம்பிக்கைகளில் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இந்து மதம் இன்று வரை சிலை வணக்கத்தைக் கடைபிடித்தே வருகிறது. எனினும் சிலை வணக்கம் குறித்து அதில் பலருடைய மனநிலைகளில் மாற்றம் இருக்கிறது. பலர் இந்த சிலைகளை நாம் கடவுளர்களாகக் கருதுவதில்லை, மாற்றமாக தமது சிந்தனை ஒருமைப்பாட்டுக்காகத்தான் இவை பயன்படுத்தப்படுகின்றன, மற்றபடி நாம் ஓரிறைவனைத்தான் வணங்குகிறோம் என்கின்றனர். இது இஸ்லாத்தின் சிந்தனைகளால் ஏற்பட்ட ஒரு மாற்றமாகும். ஏலவே குறிப்பிட்ட சங்கராச்சாரியார் போன்றவர்களும் சிலை வணக்கத்தைக் கடுமையாக எதிர்த்தவர்களில் ஒருவராவார். மிக முக்கியமாக பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்கூறுகளில் சுவாமி தயாநன்தா சரஸ்வதி என்பவர் பன்ஜாப்பில் உருவாக்கிய ஆரிய சமாஜம் என்ற அமைப்பினர் சிலை வணக்கத்திலிருந்து முழுமையாக வெளியே வந்துள்ளனர். இவர்களது சிந்தனைகளில் இஸ்லாத்தின் போதனைகள் பல இடங்களில் தாக்கம் செலுத்தியிருப்பதைக் காணலாம். விதவைகள் மறுமணம் இதில் முக்கியமானது[3].
3. **இஸ்லாத்தின் சமத்துவ சிந்தனையும் சாதிகள் மறுக்கப்பட்டமையும்:** இந்துக்களிடத்தில் சாதி என்பது ஒரு சமூக ரீதியான பாகுபாடு என்பதை விடவும் அது நம்பிக்கை சார்ந்த ஒரு பாகுபாடாகும். வைதீக இந்துக்கள் சாதிமுறை பிரம்மனிடமிருந்து தோன்றியது என்று நம்புகின்றனர்[4]. அந்தவகையில் இந்துக்களிடத்தில் சாதிமுறை என்பது ஒரு சமய நம்பிக்கையாகவே கருதப்படுகிறது. உயர்சாதிக்கு தாழ்ந்த சாதியினர் ஊழியம் செய்வது ஒரு உன்னத செயற்பாடு, ஒரு சமயக் கடமை, இல்லாத போது அது தெய்வக் குற்றம் என்ற நிலையில் பார்க்கப்பட்டது. இது பற்றிய பல சட்டங்கள் மனுசாஸ்திரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கின்றன[5]. இஸ்லாத்தினது சமத்துவ சிந்தனை இந்து மக்களிடத்திலும்

இந்து சமய சீர்திருத்தவாதிகளிடமும் பாரிய தாக்கத்தை செலுத்தியது. சங்கராச்சாரியார், சுவாமி தயானந்தா போன்றவர்கள் இஸ்லாத்தின் சமத்துவ சிந்தனையின் தாக்கத்தில் இருந்தே சாதி ஒழிப்புக்கு எதிராக செயற்பட்டார்கள். அது போல், வங்காளத்தின் சீர்திருத்தவாதியான ராம் மோகன் ராதீ என்பவர் அறபு மொழியைக் கற்று அல்குர்ஆனை வாசித்திருக்கிறார். அதன் சிந்தனைகளை மையப்படுத்தியே தனது புதிய வேதமான பிராமண சமாஜம் என்ற அமைப்பை கட்டியெழுப்பினார். அதில் பிரதானமாக ஏகதெய்வக் கொள்கை, சமத்துவ சிந்தனை, விதவைகள் மறுமணம் போன்ற பல விடயங்களை இஸ்லாத்திலிருந்து பெற்றுக் கொண்டார். இந்தியத் தத்துவஞ்ானி தாகூரும் இவரது சிந்தனையால் கவரப்பட்டவராவார்[6].

மொழி ரீதியான தாக்கங்கள்: முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வந்த போது, அறபு, பாரசீகம் மற்றும் துருக்கிய மொழிகளைப் பேசினர். இந்த மொழிகள் இந்திய மக்களின் வாழ்க்கையில் பல்வேறு தாக்கங்களை ஏற்படுத்தின. அதே போன்று உள்ளூர் மொழிகளும் இலக்கியங்களும் முஸ்லிம்களின் மொழிகளில் தாக்கம் செலுத்தின. அவற்றில் பிரதானமான நான்கு விடயங்களை இங்கு குறிப்பிடுகிறேன்.

1. **உர்து என்னும் புதிய மொழியின் தோற்றம்:** உர்து என்பதன் பொருள் இராணுவ மொழி அல்லது சேனை மொழி என்பதாகும். அதாவது, இந்த மொழி அடிப்படையில் மொகலாயர் காலத்தில் இராணுவ நடவடிக்கைகளின் போது, எதிரிகள் புரிந்து கொள்ளாத விதத்தில் தகவல் பரிமாறிக் கொள்வதற்கான சங்கேத மொழியாகவே தோற்றம் பெற்றது. அது அறபு, பாரசீகம், துருக்கி, சமஸ்கிருதம் போன்ற பல மொழிகள் இணைந்த ஒரு கூட்டு மொழியாகும்[7]. இராணுவ மொழியாக இது தோற்றம் பெற்ற பொழுதிலும் நாளடைவில் ஆட்சி பீடத்திலிருந்த முஸ்லிம்கள் இந்திய மக்களுடன் தொடர்பு கொள்ள வேண்டிய தேவைகளுக்கும் சூபிக்களின் இஸ்லாமியப் போதனைகளுக்கும் சுதேச மக்கள் விளங்கிக் கொள்ளும் ஒரு மொழி அவசியப்பட்டது[8]. அதற்கு அறபு, பாரசீகம், துருக்கிய மொழிகளோ அல்லது இந்திய சுதேச மொழிகளான ஹிந்தி, குஜராத்தி, தமிழ், மராட்டி போன்றவையோ போதுமானவையாக இருக்கவில்லை. இந்த இடைவெளியை நிரப்பும் வகையிலேயே இந்தப் புதிய மொழியின் தோற்றம் இடம்பெற்றது. நாளடையவில் மொகலாயர்கள் மற்றும் ஆங்கிலேயர்களிடத்தில் அரச மொழியாகவும் சிறந்த கலை இலக்கியங்களைக் கொண்ட ஒரு மொழியாகவும் அது மாற்றம் பெற்றது.
2. **மொழிபெயர்ப்புப் பணிகள்:** இந்திய சமஸ்கிருத மொழி நூல்கள் பல அறபு மற்றும் பாரசீக மொழிகளில் பெயர்க்கப்பட்டது போல், அறபு மற்றும் பாரசீக நூல்கள் உள்ளூர் மொழிகளிலும் பெயர்க்கப்பட்டன. அறபு மற்றும் பாரசீக மொழிகளில் பெயர்க்கப்பட்ட சமஸ்கிருத நூல்களுக்கு உதாரணங்களாக துத் நாமா, ஸியா நக்ஷபி என்பவரின் 52 சிறுகதைகளின் தொகுப்பு, முல்லா அப்துல் காதர் பதானி என்பவரால் அதர் வேதம் மற்றும் இராமாயணம் என்பன பெயர்க்கப்பட்டமை, இப்னுல் முகப்பஃ பஞ்ச தந்திரக் கதைகளை பெயர்த்தமை போன்றவற்றைக் குறிப்பிடலாம். இவையனைத்தும் பாரசீக மொழிக்குப் பெயர்கப்பட்டவை. அதுபோல் அபூ ஸாலிஹ் மற்றும் அபுல் ஹஸன் அலி ஆகியோரால் மஹாபாரதத்தின் சில பகுதிகள் அறபு மொழிக்கும் பெயர்க்கப்பட்டுள்ளன. இவற்றிற்கப்பால் பைரூஸ் துக்ளக்கின் காலத்தில் அபுல் பஸல் மற்றும் அவரது சகோதரர் பாய்ஸீ ஆகியோர் மூலம் பல மருத்துவ நூல்களும் மொழிபெயர்க்கப்பட்டன[9].
3. **வரலாற்றை எழுதுதல்:** இந்திய வரலாற்றை எழுதியதில் முஸ்லிம்களுக்கு பெரும் பங்கிருக்கிறது. முஸ்லிம்களே இந்தியாவின் முதலாவது வரலாற்றாசிரியர்கள் என்பதை கஸ்தவ் லீ போன் என்னும் ஐரோப்பிய எழுத்தாளர் குறிப்பிடுகிறார்[10]. அதிலும் குறிப்பாக

பாரசீக மொழியில் இந்திய வரலாறு தொடர்பில் பல நூல்கள் எழுதப்பட்டுள்ளன. அபுல் பஸல், நிஸாமுத்தீன் அஹ்மத், பதாஉனி, அப்துல் ஹமீத் லாஹூரி, காபி கான் போன்ற பல வரலாற்றாசிரியர்களை மொகலாய காலத்தில் காணலாம். முஸ்லிம்களால் எழுதப்பட்ட வரலாற்று நூல்கள் இன்றுவரை இந்திய வரலாற்றின் மிக முக்கிய மூலங்களாகக் காணப்படுகின்றன. உதாரணமாக ஹஸன் நிழாமி என்பவரது தாஜுல் மஸீர், மின்ஹாஜ் சிராஜ் என்பவரது தபகாதே நாஸிரி, அபீப் என்பவரது தாரீகே பிருஜ்ஸாஹி, இஸாமி என்பவரது புதூஹுஸ் ஸலாதீன் போன்ற பல நூல்களை உதாரணமாகக் குறிப்பிடலாம்[11].

4. **இந்திய சுதேச மொழிகளில் ஏற்படுத்திய தாக்கம்:** அறபு, பாரசீகம், துருக்கிய மொழிகள் இந்திய சுதேச மொழிகளில் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. அவற்றின் இலக்கணம், உரை நடை, இலக்கியம் பலவற்றில் இந்தத் தாக்கத்தை அவதானிக்கலாம். குறிப்பாக ஹிந்தி, குஜராத்தி, மராத்தி, பன்ஜாபி போன்ற மொழிகளில் இந்தத் தாக்கம் பிரதானமானது. பேராசிரியர் ஷங்கர் தத்தா அவர்கள், முஸ்லிம் எழுத்தாளர்கள் உள்ளூர் மொழிகளில் இந்திய மக்களின் வாழ்வைப் பற்றி எழுதியுள்ளார்கள் என்று குறிப்பிடுகிறார்[12]. இந்திய எழுத்தாளர் அனில் சந்திரா பேனர்ஜி அவர்கள் குறிப்பிடும் பொழுது, பெரும்பாலான இந்திய பாரசீக இலக்கியங்களைப் பார்க்கும் பொழுது, ஆயிரக் கணக்கான பாரசீகச் சொற்கள் இந்திய சுதேச மொழிகளின் அடிப்படைச் சொற்களாக மாறியுள்ளதைக் காணலாம். அறபு, பாரசீக, துருக்கிய மொழிகள் சமஸ்கிருத மொழிகள் மற்றும் சிந்தனைகளுடன் இரண்டறக் கலந்தமை உண்மையில் இந்தியாவில் நிகழ்ந்த ஒரு அழகான விடயம் என்கிறார்[13].

சமூக பண்பாட்டு ரீதியான தாக்கங்கள்: இஸ்லாத்தின் வருகையால் இந்திய சமூகப் பண்பாட்டு வாழ்க்கையில் மிக முக்கியமான தாக்கங்கள் நிகழ்ந்துள்ளன. குறிப்பாக இந்தப் பகுதி சில இந்திய எழுத்தாளர்களால் தவறாக வியாக்கியானம் செய்யப்பட்டமையும் காணப்படுகிறது. எனினும் இஸ்லாம் ஏற்படுத்திய நல்ல விளைவுகள் என்றும் வெளிச்சத்திற்கு வந்தே இருக்கின்றன.

1. **முஸ்லிம்களது வாழ்வு அழகியலை இந்துக்கள் பின்பற்றியமை:** இந்திய மக்களது வாழ்வு, மிகவும் எளிமையான சாதாரண தோற்றத்தைப் பிரதிபளிக்கக் கூடியதாகவே பொதுவாகக் காணப்பட்டிருக்கிறது. ஆனால் முஸ்லிம்களது வாழ்வின் புறத்தோற்றம் என்றும் ஒரு அழகியலைப் பிரதிபளிக்கக் கூடியவை. பிறரைக் கவர்ந்து அவர்களையும் பின்பற்ற வைக்கக் கூடியவை. நேர்த்தியான ஆடைகள், நல்ல உணவு வகைகள், பாத்திரப் பயன்பாடுகள், விருந்தோம்பல் முறைகள், வீட்டு வடிவமைப்புகள் போன்ற பல வாழ்வியல் அம்சங்களில் காணப்பட்ட அழகியலை இந்து உயர்குடிகள் குறிப்பாகப் பின்பற்றத் துவங்கினர். முஸ்லிம்களது பிரியாணி, கபாப் போன்ற உணவுவகைகள் மாத்திரமன்றி, முஸ்லிம்களது ஸலாம் கூறுதல், இன்ஷா அல்லாஹ் சொல்லுதல் போன்ற பழக்கங்களும் கூட அவர்களது வாழ்க்கையில் பிரதிபளித்தது[14].
2. **அநீதியான சமூகப் பழக்கவழக்கங்கள் இல்லாமலாக்கப்பட்டமை:** சிசுக் கொலை, குழந்தைத் திருமணம், பெண்கள் உடன்கட்டை ஏறுதல், ஒரு பெண் பல கணவர்களை சமகாலத்தில் திருமணம் செய்தல், ஒரு தேங்காயைத் திருடினாலும் அதற்காகக் கொலைத் தண்டனை விதித்தல் போன்ற பல்வேறு அநீதியான சமூகப் பழக்கங்கள் வேதகாலத்தைத் தொடர்ந்த இந்திய வாழ்க்கை மரபில் காணப்பட்டது. இவை காணப்பட்டமைக்கான சான்றுகளை மனு, மஹாபாரதம், இராமாயணம், அர்த்தசாஸ்திரம் போன்றவற்றில் காணலாம்[15]. மாத்திரமன்றி இப்னு பதூதா தனது பயணக் குறிப்பிலும் இந்தியாவில் காணப்பட்ட இது போன்ற அநீதியான பழக்க

வழக்கங்களைக் குறித்துக் காட்டியுள்ளார்[16]. இத்தகைய பழக்க வழங்கங்கள் முஸ்லிம்களது ஆட்சிக் காலப்பகுதியில் பெரிதும் மாற்றப்பட்டிருக்கின்றன. மன்னர்களது சட்ட நடவடிக்கைகளால் மாற்றப்பட்டது போல்[17], இஸ்லாத்தின் போதனைகளால் கவரப்பட்டதன் காரணமாகவும் இவை தவிர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக சங்கராச்சாரியார், ஆரிய சமாஜம், பிராமண சமாஜம் போன்ற அமைப்புக்களின் பிரச்சாரங்களில் இவை பெரிதும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. துரதிஷ்டவசமாக சில இந்திய எழுத்தாளர்கள் மேற்குறித்த சமூக பழக்கங்கள் இந்தியர்களிடத்தில் தோன்றுவதற்கு இஸ்லாமும் முஸ்லிம்களுமே காரணம் என்று திரிபுபடுத்தப்பட்ட விளக்கங்களை வழங்கியுள்ளனர்[18]. இது தவறான வாதம் என்பது இந்தியக் கலாச்சார வரலாற்றைக் கற்கும் எவரும் எளிதில் புரிந்து கொள்ளும் உண்மையாகும்.

அரசியல் ரீதியான தாக்கங்கள்: சுமார் ஆயிரம் வருடங்கள் இந்தியாவை முஸ்லிம்கள் ஆட்சி செய்திருக்கின்றமை இந்தியாவின் அரசியலில் பல தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. அது குறித்து ஒரு விடயத்தை மாத்திரம் இங்கு முன்வைக்கிறேன்.

1. **இந்தியா என்ற ஒரு நாடு தோற்றம் பெற்றமை:** தற்போது இந்தியா என்றழைக்கப்படும் நாடு உருவாகக் காரணமானவர்கள் உண்மையில் முஸ்லிம்களாவர். முஸ்லிம்கள் இந்தியாவுக்கு வருவதற்கு முன்னர், கூர்ஜர-பிரதிஹரர்கள் நாடு, கன்னோசி நாடு, பாலர்கள் நாடு, கலிங்க நாடு, ராஷ்டிர கூடர்கள் நாடு, பாண்டிய நாடு, சேர நாடு, சோழ நாடு என பல நாடுகளாகவே இந்தியா இருந்தது. இந்தியா முழுமைக்கும் ஒரே மன்னனோ, ஒரே தலைநகரமோ, ஒரே சட்டமோ, ஒரே நிர்வாகமோ, ஒரே நிர்வாக மொழியோ இருக்கவில்லை. இந்தியா முழுவதையும் ஒரே அரசின் கீழ் இணைத்தது அலாவுத்தீன் கில்ஜியாவார். தொடர்ந்து வந்த ஆட்சியாளர்கள் சுமார் 500 வருடங்கள் இந்தப் பாரம்பரியத்தைத் தொடர்ந்தும் எடுத்து வந்தனர். முஸ்லிம் ஆட்சியாளர்கள் சுற்றியிருந்த சிற்றரசுகள் மீது நடாத்திய படையெடுப்புக்கள் உண்மையில் இந்தியாவைக் கூறுபோடுவதாக அல்லாமல் இந்தியாவை ஒன்றிணைப்பதாகவே அமைந்திருந்தது. மாத்திரமன்றி இந்தியாவை ஆண்ட முஸ்லிம் பரம்பரையினர் எவரும் இந்தியாவிலிருந்து எந்த சொத்தையும் வெளியில் எடுத்துச் செல்லவில்லை. ஏனெனில் அவர்கள் இந்தியாவை தமது தாய்நாடாகவே கொண்டிருந்தனர். அதனால் இந்தியாவை நோக்கியே அனைத்து அபிவிருத்திகளையும் செய்தனர். இது வரலாற்றில் தெளிவான ஒரு உண்மை எனினும் இந்தியப் பரப்புக்குள் வெளிப்படையாகப் பேசப்படாத ஒன்று என்பது கசப்பான உண்மையாகும்[19].

கலை இலக்கிய ரீதியான தாக்கங்கள்: கலை மற்றும் இலக்கிய ரீதியான தாக்கங்கள் உண்மையில் மிகவும் அதிகமானவை. ஏனெனில் அடிப்படையில் இந்திய மரபும் கலை இலக்கியங்களுக்குப் பெயர் போனது. அது போல் அறபு, பாரசீக, மொங்கோலிய மரபுகளிலும் கலை இலக்கியங்கள் மிகுந்த செல்வாக்குச் செலுத்தியிருந்தன. எனவே இந்த செழுமையான இரு மரபுகளும் சந்திக்கின்ற பொழுது, அங்கு பல புதுமைகள் தோற்றம் பெற்றன. அந்தவகையில் இஸ்லாமிய கலை இலக்கிய மரபுகளில் இந்திய வாழ்க்கையில் தாக்கம் செலுத்திய சில பரப்புக்கள் குறித்து சில குறிப்புக்களை அடுத்து தருகிறேன்.

1. **கவிதைகள்:** பாரசீகம் மற்றும் உர்து மொழிகள் இலக்கியங்களுக்குப் பெயர் போன மொழிகள். முஸ்லிம்கள் காதலையும் அழகியலையும் ஒழுக்கத்தையும் பேசுவதற்கு கஸல் என்ற கவிதை வடிவத்தை அறிமுகம் செய்தனர். அதன் ஒவ்வொரு அடியும் சம அளவு கொண்டதாகவும் அடியின் இறுதிகள் ஒவ்வொன்றும் மற்றையதுடன் எதுகை மோனையில் ஒத்துச் செல்லும் வகையிலும் காணப்படும். இந்தக் கவிதை வடிவம்

இந்தியக் கவிஞர்களிடம் பெரிய செல்வாக்கைப் பெற்றது. அதுபோல், லக்னோவின் இரு கவிஞர்களான அனீஸ் மற்றும் தனீர் ஆகியோர் ஹுஸைன் ரழியவர்களது வாழ்வை இரங்கற்பா வடிவில் படித்தனர். இந்த முறைமையும் இந்தியக் கவிஞர்களிடம் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியது. அவர்கள் இராமாயணக் கதைகளை இந்த வடிவில் மக்களுக்கு முன்வைக்கத் தொடங்கினர்[20].

2. **இசைக் கலை:** இந்தியாவை ஆண்ட முஸ்லிம் மன்னர்கள் இசைக் கலைக்கு பெரிதும் பங்களித்துள்ளனர். குறிப்பாக மொகலாயர்கள் பெரும் இசை இரசிகர்களாக இருந்துள்ளனர். சாஜஹான் ஒரு சிறந்த பாடகராகவும் இருந்திருக்கிறார்[21]. அதுபோல், முஸ்லிம்களால் பல மெல்லிசை இராகங்கள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளன. தும்ரி, காயல், கவாலி, துருபாத் ராகம் போன்றன இந்திய இசையை பெரிதும் மெல்லிசைப் பாங்குக்கு எடுத்துச் சென்றன. அதே போல் பல புதிய இசைக் கருவிகளும் முஸ்லிம்களால் அறிமுகம் செய்யப்பட்டன. கிடார், ரபான், தப்லா போன்றன முக்கியமானவை[22].
3. **கட்டடக் கலை:** கட்டடக் கலையில் முஸ்லிம்கள் இந்திய வாழ்க்கையில் அதிக தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளனர். முஸ்லிம்களது கோளவடிவ குப்பாக்கள், உயர்ந்த மினாராக்கள், பரந்த மண்டபங்கள், பெரிய முற்றம், வளைவுகள், குகை வடிவிலான வராந்தைகள் போன்ற மிகப் பிரபலமான கட்டட வடிவங்களை இன்றும் இந்தியக் கட்டடங்களில் அவதானிக்கலாம். இவற்றில் தில்லி சுல்தான்கள் கால கட்டடங்களுள் குதுப் மினார், குவ்வதுல் இஸ்லாம் மஸ்ஜித், காளி மஸ்ஜித், பேகம்புரி மஸ்ஜித், முபாரக் செய்யத், சிக்கந்தர் லோடி ஆகியோரின் கல்லறைகள் போன்றன குறிப்பிடத்தக்கவை. மோகலாயர் கால கட்டடங்களில் தாஜ்மஹால், தில்லி மற்றும் ஆக்ராவில் அமைந்துள்ள சிவப்புக் கோட்டைகள், ஜாமிஆ மஸ்ஜித், அக்பரின் கல்லறை, ஹுமாயூன் கல்லறை போன்றவை குறிப்பிடத்தக்கவை.[23]. இங்கு விஷேடம் என்னவெனின், முஸ்லிம்கள் கட்டடங்கள் கட்டுவதில் புதிய கலை வடிங்களை அறிமுகப்படுத்திய போதும், கட்டடம் கட்டும் தொழிலை செய்தவர்கள் அதிகமாக இந்துக்கள் என்ற வகையில் அங்கு இந்தோ இஸ்லாமியக் கலை வடிவம் ஒன்று தோற்றம் பெறக் காரணமானது என தாரா சந்த் அவர்கள் குறிப்பிடுகிறார். அதன் விளைவாக பின்னர் கட்டப்பட்ட பல இந்துக் கோயில்களும் இந்து மன்னர்களின் மாளிகைகளும் கூட இஸ்லாமியக் கட்டடக் கலை வடிவத்தில் அமையப் பெற்றன என்கிறார். உதாரணமாக ஜெய்ப்பூரில் ராஜா சிவா ஜாய் சிங் மாளிகை, வங்காளத்தில் காவத் மால்தா கோயில் காத்மண்டு கோயில், பனாரிஸில் அமைந்துள்ள பேசிவார் கோயில், அம்ரிஸ்தாரில் உள்ள சீக்கியர்களின் தங்கக் கோயில் போன்ற பலவற்றைக் குறிப்பிடலாம்[24].
4. **ஓவியக் கலை:** புராதன இந்தியாவில் குப்தர்களின் காலத்தில் ஓவியக் கலை சிறந்து விளங்கியது. அஜன்தா ஓவியங்கள் இந்தக் காலத்திற்கு உரியனவாகும். எனினும் குப்தர்களுக்குப் பின்னர் ஓவியக் கலை எவராலும் பெரிதும் கண்டு கொள்ளப்படாத ஒரு கலையாகவே இருந்து வந்துள்ளது. பின்னர் அதனை மீள உயிர்ப்பித்தவர்கள் மொகலாயர்கள் ஆவர். பாரசீக மற்றும் சீன ஓவியக் கலையின் கலவையாக இவர்களது ஓவியங்கள் காணப்பட்டன. மொகலாயர் காலத்தில் மீர் செய்யத் அலி, தோஷ்த் முகம்மத், பாஸ்வான், மன்சூர், அபுல் ஹஸன் போன்ற பல சிறந்த ஓவியர்கள் இருந்திருக்கிறார்கள். இவர்களது ஓவியங்கள் வரலாறு, இயற்கை போன்ற பல விடயங்களைக் கருப் பொருட்களாகக் கொண்டிருந்தன. பிற்பட்ட காலத்தில் வளர்ந்த ராஜபுத்திரர்களின் ஓவிய மரபு பெரிதும் முஸ்லிம்களது ஓவிய மரபினால் தாக்கமடைந்தது[25].
5. **பூங்காக் கலை:** பூங்காக் கலை முஸ்லிம்கள் அறிமுகப்படுத்திய மிக முக்கிய கலைகளில் ஒன்றாக இருந்தது. இது அழகியல் மாத்திரமன்றி தமது வாழ்வின் சிரமங்களில் இருந்து ஓய்வைப் பெற்றுக் கொள்வதற்கும் காலநிலையின் குளிர்மையைப் பேணுவதற்குமாக உருவாக்கப்பட்டன. மொகலாய மன்னர்கள் இந்தத் துறையில் மிகுந்த ஈடுபாடு

காட்டியவர்கள். தமது ஓய்வு காலங்களில் எழில் தோட்டங்களை உருவாக்கியது மாத்திரமன்றி நாட்டின் இயற்கை எழிலை ரசிப்பதற்காக பல பயணங்களையும் மேற் கொண்டனர். மன்னர் அக்பரின் இத்தகைய பயணங்கள் பிரபலமானவை. அதிலும் காஷ்மீரின் அழகில் அவர் எப்பொழுதும் லயித்திருப்பார். லாஹூரின் சாஜஹானால் உருவாக்கப்பட்ட 80 ஏக்கர் நிலப்பரப்பைக் கொண்ட பூங்கா, காஷ்மீரின் ஷாலிமார் பூங்கா என்பன பிரபலமானவை. இவை பல நீரூற்றுக்களையும் கொண்டிருக்கின்றன. இவற்றில் மூலிகைச் செடிகளும் காணப்படுகின்றன.[26].

6. **மருத்துவம்:** யூனானி என்ற மருத்துவ முறையை முஸ்லிம்கள் இந்தியாவுக்குக் கொண்டு வந்தார்கள். மேற்கின் அலோபதி முறை அறிமுகமாவதற்கு முன்னரே இந்த மருத்துவ முறை உலகில் அங்கீரிக்கப்பட்டிருந்தது. எளிமையாகவும் மலிவாகவும் இந்திய காலநிலைக்கு ஏற்ற வகையிலும் காணப்பட்டதால் இந்தியாவில் இந்த மருத்துவ முறை வெகுவாகப் பரவியது[27].

கல்வி ரீதியான தாக்கங்கள்: ஏற்கனவே பேசப்பட்ட மொழி ரீதியான தாக்கங்கள், சமூகப் பண்பாட்டு ரீதியாக தாக்கங்கள், கலை இலக்கிய ரீதியான தாக்கங்கள் போன்ற தலைப்புக்களில் பேசப்பட்ட பல விடயங்களும் கல்வியுடன் சம்பந்தப்பட்டவை என்றிருப்பினும், இந்தப் பத்தியில் நேரடியாகக் கல்வி ரீதியான தாக்கங்கள் பற்றிய நான்கு விடயங்களைக் குறித்தக் காட்டலாம் என்று நினைக்கிறேன்.

1. **கல்வி நிலையங்கள் தாபிக்கப்பட்டமை:** முஸ்லிம்களது ஆட்சி வரலாறு முழுவதும் தனித்துத் தென்படக் கூடிய ஒரு செயற்பாடாக இதனைக் காணலாம். ஆரம்ப நாட்களில் மத்ரஸாக்கள் மற்றும் மக்தபுகள் மூலமே கல்வி போதிக்கப்பட்டது. அவை பள்ளிவாயல்களுடன் இணைந்தே காணப்பட்டன. முகம்மத் பின் துக்ளக் தில்லியில் கி.பி 1346 ல் ஒரு மத்ரஸாவை நிறுவி அதனைப் பள்ளிவாயலுடன் இணைத்தார். பைரூஸ் ஷாஹ் துக்ளக் அவர்கள் நாடு முழுவதும் 30 மத்ரஸாக்களை நிறுவினார். முகம்மத் காவன் என்ற முதலமைச்சர் பீஹாரில் கி.பி 1470 ல் ஒரு மத்ரஸாவை நிறுவி அதன் தலைவராக இப்ராகீம் முல்தானி என்பவரை நியமித்தார். ஹூமாயூன் தில்லியில் ஒரு மத்ரஸாவை நிறுவி அதன் தலைவராக ஷேக் ஹூஸைன் என்பவரை நியமித்தார். மன்னர் அக்பரின் காலம் கல்வித்துறையில் பல அபிவிருத்திகளைக் கண்ட காலமாகும். அதில் குறிப்பாக இன, மத வேறுபாடின்றி அனைவரும் கல்வி கற்கக் கூடிய சூழலை அவர் ஏற்படுத்தினார்[28].
2. **வாசிகசாலைகள் அமைக்கப்பட்டமை:** இந்திய வாழ்க்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்திய ஒரு முக்கிய அம்சமாக முஸ்லிம்களால் வாசிகசாலைகள் அமைக்கப்பட்டமையைக் குறிப்பிடலாம். மன்னர்கள், இளவரசர்கள், அரச பிரதானிகள் மாத்திரமன்றி பொதுமக்களும், நூல்கள் மீதும் வாசிப்பின் மீதும் பெரும் காதலை வெளிப்படுத்தினர். தில்லியில் மன்னர் ஹூமாயூனினால் உருவாக்கப்பட்ட வாசிகசாலை மிகவும் பிரபல்யமானது. அந்த வாசிகசாலையில் நூல்களைப் பெற்றுக் கொள்ள முற்பட்ட போது தவறி விழுந்ததினால்தான் அவர் மரணமடைந்ததாகவும் சொல்லப்படுகிறது. அதுபோல் ஷாஜஹானின் புதல்வர்களில் ஒருவரான தாராக்ஷா ஒரு சிறந்த வாசிப்பாளர், கவிஞர், நூல்களில் பெரும் ஆர்வம் கொண்டவர். அவரும் ஒரு பெரும் வாசிக சாலையை நிறுவியிருந்தார். 1857ம் ஆண்டுக் கலவரத்தின் போது முஸ்லிம்களின் ஏராளமான நூல்களும் வாசிகசாலைகளும் அழிக்கப்பட்டன. அவற்றில் சில இன்றும் ஐரோப்பிய நூலகங்களில் பாதுகாக்கப்பட்டுள்ளன. அவை இந்திய முஸ்லிம் மன்னர்களால் உருவாக்கப்பட்டவை என்பதற்கு அந்த நூல்களில் காணப்படும் அவர்களது கையொப்பங்கள் முக்கிய ஆதாரங்களாகும்[29]. அத்துடன் மன்னர் அவ்ரங்கசீப்பின்

மகளான ஸைபுந்நிஸா என்பவரும் ஒரு அரிய நூலகத்தை உருவாக்கிப் பராமரித்து வந்தார்[30].

3. **மார்க்கக் கலைகள் மாத்திரமன்றி உலகக் கலைகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டமை:** மார்க்கக் கலைகளான தப்ஸீர், பிக்ஹ், ஹதீஸ் போன்ற கலைகள் மாத்திரமன்றி மருத்துவம், கணிதவியல், வானியல், கணக்கியல், தர்க்கவியல், விவசாயம் போன்ற பல்துறைகள் கற்பிக்கப்பட்டன. மன்னர் பல்பன் மற்றும் அக்பர் போன்றோரது காலங்கள் இந்தவகையில் சிறப்புற்று விளங்கின[31].
4. **பெண்கள் கல்விக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டமை:** முஸ்லிம் மன்னராட்சியில் பெண்கள் கல்வி ஆண்கள் கல்வியை விட்டும் வித்தியாசப்பட்டுக் காணப்படவில்லை. ஆண்கள் கல்வி கற்பதற்கு எடுக்கப்பட்ட அனைத்து நடவடிக்கைகளிலும் பெண்களும் பங்காளிகளாக இருந்துள்ளனர். அத்துடன் வசதி படைத்தோர் தமது பெண்களுக்கு வீடுகளுக்கு ஆசிரியர்களைத் தருவித்துக் கல்வியை வழங்கினர். பள்ளிவாயல்களில் பெண்களுக்கு பிரத்தியேகமாக மார்க்கக் கல்வி வழங்கப்பட்டது. கியாஸுத்தீன் கில்ஜி சாரான்பூரில் பெண்களுக்கான தொழிற்கல்விக்கான நிலையம் ஒன்றை அமைத்தார். இவற்றின் விளைவாக சலீமா சுல்தானா, மகாம் அனாகா, சாந்த் சுல்தானா, மும்தாஜ் பேகம் போன்ற பெண் கல்விமான்கள் தோன்றினர். பெண்கள் கல்வி குறித்து பரஷ்தா என்ற வரலாற்றாசிரியர் குறிப்பிடும் பொழுது, பெண்களுக்கு நடனம், இசை, தையல், கைத்தறி நெசவு, தச்சுத் தொழில், நகை செய்யும் தொழில், காலணிகள் தயாரித்தல், மல்யுத்தம், யுத்தப் பயிற்சி ஆகிய அனைத்துக் கலைகளும் கற்பிக்கப்பட்டன என்கிறார். அதனால்தான் இல்துமிஷின் மகளான ரழிய்யா சுல்தானா என்பவர் போர்க்கலைகளில் சிறப்புற்று விளங்கியதைக் காணலாம்[32].

பொருளாதார ரீதியான தாக்கங்கள்: இந்தியாவுக்கு முஸ்லிம்கள் அடிப்படையில் வியாபாரிகளாகவே வந்தார்கள். இஸ்லாத்திற்கு முற்பட்ட காலம் முதல் இருந்து வந்த அறபு இந்திய அல்லது பாரசீக, யமனிய, எகிப்திய இந்திய வணிகத் தொடர்புகள்தாம் நாளடைவில் முஸ்லிம் இந்தியத் தொடர்புகளாக மாற்றமடைந்தன. கி.பி எட்டாம் நூற்றாண்டுக்கும் 15ம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலம் இந்தியாவில் முஸ்லிம்கள் வியாபாரத்தில் சிறந்து விளங்கிய காலமாகும். இந்து மன்னர்கள் முஸ்லிம்களுடன் சிறந்த தொடர்பையும் நல்லுறவையும் பேணியமைக்கான அடிப்படைக் காரணம் அவர்கள் மூலம் அவர்களது நாடு அடைந்த பொருளாதார நன்மைகளேயாகும். தாரா சந்த் அவர்கள் குறிப்பிடுவது போல்[33], கேரளத்தில் ஸாமூரீக்கள் அறபு முஸ்லிம் வியாபாரிகளைப் பெரிதும் கௌரவப் படுத்தினர் காரணம் அவர்கள் ஸாமூரீக்களுக்கு பொருளாதார ரீதியாக மாத்திரமன்றி யுத்தங்களில் கூட உதவினார்கள். வைலாபுரம் என்ற இடத்தில் ஒரு முஸ்லிம் வியாபாரி ஆரம்பித்த சந்தை, காலப் போக்கில் மிகப் பெரிய பொருளாதார நகரமாக மாற்றமடைந்தது. இன்று கல்லிகட் என்று அழைக்கப்படும் துறைமுக நகரம் இதுவாகும் என்கிறார். அதுபோல் தென்னகத்தின் கிழக்குக் கரைகளிலும் மன்னர்கள் முஸ்லிம்களை மிகவும் கௌரவமாக நடாத்தினர். காரணம் அவர்கள் நாட்டுக்கு வளங்களைக் கொண்டு வரும் வியாபாரிகளாக இருந்தமையேயாகும். வஸ்ஸாப் என்பவரை மேற்கோள் காட்டி தாரா சந்த் குறிப்பிடுகிறார். முஸ்லிம்களது வியாபாரம் கொல்லம் முதல் நய்லூர் வரையில் சுமார் 300 பர்ஸக்கள் வரை வியாபித்திருந்தது என்கின்றார்[34]. அது போல் கி.பி 13ம் நூற்றாண்டில் குதிரை வியாபாரம் பெரிய முக்கியத்துவத்தை எடுத்தது. தென்னகத்தின் கைஸ் என்னும் பகுதியை ஆட்சி செய்த முஸ்லிம் ஆட்சியாளர், குதிரை வியாபாரத்திற்காக தனியான தூதரகங்களை அமைத்தார். வருடாந்தம் சுமார் 10000 குதிரைகள் பாரசீகத்தில் இருந்து இறக்குமதி செய்யப்பட்டன. அவற்றின் பெறுமதி சுமார் 20 மில்லியன் தீனார்களாகும்[35].

இந்தியாவை ஆண்ட முஸ்லிம் ஆட்சியாளர்கள் பொதுவாக பொருளாதார ரீதியாக நாட்டை அபிவிருத்தி செய்வதில் அதிக அக்கறை காட்டியிருக்கின்றனர். காரணம் அவர்கள் இந்தியாவை தமது தாய் நாடாக ஏற்றுக் கொண்டு, இதற்கே சேவை செய்திருக்கிறார்கள்[36]. அந்த வகையில் மத்தியாசியாவிலிருந்து சுவையுள்ள பழங்களும் மரம் செடி கொடிகளும் இந்தியாவுக்குக் கொண்டுவரப்பட்டு பயிரிடப்பட்டுள்ளன. ஓட்டு மாம்பழம் முதலில் மொகலாய மன்னர்களால் உருவாக்கப்பட்டது. சுல்தான் மஹ்மூத் ஷாஹ் குஜராத்தில் வேளாண்மை, வணிகம், கைத்தொழில் ஆகிய துறைகளில் தமது பிரஜைகள் முன்னேறும் படி ஊக்குவித்தார். கல், யானைத் தந்தம் ஆகியவற்றில் சிற்ப வேலை, காகிதம் செய்தல் முதலியன முன்னேற்றம் கண்டன. வகைவகையான மெல்லிய வண்ணமுள்ள ஜவுளிகள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன. இதற்காக அந்த மன்னர் ஈரானிலிருந்தும் துருக்கிஸ்தானிலிருந்தும் தொழில் வல்லுனர்களை குஜராத்திற்கு அழைத்து வந்தார்[37].

இவற்றைப் பார்க்கும் பொழுது, முஸ்லிம்கள் சாதாரண குடிமக்கள் என்ற நிலையிலும் சரி, ஆட்சியாளர்கள் என்ற நிலையிலும் சரி, இந்தியாவைக் கொள்ளையிட வேண்டும் என்ற மனநிலையில் இருக்கவில்லை. மாற்றமாக பொருளாதார ரீதியாக இந்தியாவை விருத்தியடையச் செய்ய வேண்டும் என்ற எண்ணத்திலேயே செயற்பட்டிருக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ள முடியும்.

அடிக்குறிப்புக்கள்

1. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.1, பக்.15-16.
2. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, ப.6, வலைத்தளத்தில் காணப்படுகிறது, http://www.nidaulhind.com/2016/11/blog-post_31.html 29-11-2019 அன்று பார்க்கப்பட்டது.
3. மேற்படி, ப.5.
4. பொன். தங்கமணி, பழங்கால இந்தியா அரசியலும் பண்பாடும் கி.பி 1206 வரை, ப.53.
5. அப்துல் முன்இம் அந்நமிர், தாரீகுல் இஸ்லாம் பில் ஹின்த், பக்.51-54.
6. மேற்படி, பக்.403,404.
7. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, ப.7.
8. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.1, பக்.322-323.
9. Anand, Islam and Indian Culture, available at http://www.historydiscussion.net/history-of-india/islam-and-indian-culture/3170 Seen on 02-12-2019.
10. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.2, ப.384.
11. Anand, Islam and Indian Culture.
12. மேலது.
13. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, ப.7.
14. அப்துல் முன்இம் அந்நமிர், தாரீகுல் இஸ்லாம் பில் ஹின்த், ப.405.
15. பொன். தங்கமணி, பழங்கால இந்தியா அரசியலும் பண்பாடும் கி.பி 1206 வரை, பக்.59-64.
16. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.1, ப.311.
17. மேற்படி, பா.2, பக்.390-391.
18. Purnima P, Impact of Islam on Hinduism/ History of India.

19. ஏ. தஸ்தகீர், இந்திய நாட்டை உருவாக்கியவர்கள் முஸ்லிம்களே, 2014, வலைத்தளத்தில் காணப்படுகிறது, http://nidur.info/old/index.php?option=com_content&view=article&id=6249:இந்திய-நாட்டை-உருவாக்கியவர்கள்-முஸ்லிம்களே&catid=51:வரலாறு&Itemid=76 02-12-2019 அன்று பார்க்கப்பட்டது.
20. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, ப.8.
21. கி. நெடுஞ்செழியன், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், பக்.291-292.
22. Anand, Islam and Indian Culture.
23. மேலது.
24. தாராசந்த், மொ.பெ. முகம்மத் அய்யூப் நத்வி, அஸருல் இஸ்லாம் பிஸ்ஸகாபா அல்ஹின்தியா, பக்.337-376.
25. Anand, Islam and Indian Culture.
26. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, பக்.15-18.
27. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.2, ப.392.
28. கி. நெடுஞ்செழியன், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், பக்.296-301.
29. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, பக்.20-22.
30. கி. நெடுஞ்செழியன், முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், ப.303.
31. மேற்படி,பக்.298-301.
32. மேற்படி, பக்.302-303.
33. தாரா சந்த், அஷ்ஷகாபா அல்ஹின்தியா வவுஸூலுல் முஸ்லிமீன் இலல் ஹின்த், ப.27.
34. மேற்படி, ப.33.
35. மேலது.
36. செய்யத் இப்றாகீம், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, பா.2, ப.390.
37. மேற்படி, ப.391.

முடிவுரை

இந்திய முஸ்லிம்களின் வரலாறு என்பது, இந்தியாவுக்கும் அறபுப் பிரதேசங்களுக்கும் இருந்த தொடர்பிலிருந்து ஆரம்பிக்கிறது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலம் முதல் இந்திய அறபுத் தொடர்பு இருந்து வந்திருக்கிறது. அதன் நீட்சியாக கி.பி ஏழாம் நூற்றாண்டில் அறபு தேசத்தில் இஸ்லாம் அறிமுகமானது முதல் இந்தியத் தென்னகத்தின் கரைகளிலும் இஸ்லாம் அறிமுகமாகியிருக்கின்றது. இதுதான் இந்தியாவுக்கான இஸ்லாத்தின் முதல் அறிமுகம். இது வியாபாரிகள் மூலம் நிகழ்ந்திருக்கிறது. பின்னர் சிந்து வெற்றிக் கொள்ளப்பட்டதுடன் இஸ்லாம் ஒரு அரசியல் சக்தியாகவும் இந்தியாவில் மாற்றமடைகிறது. சிந்து வெற்றி இஸ்லாத்தின் முதல் அறிமுகம் அல்ல.

இஸ்லாம் இந்தியாவுக்கு ஒரு சமாதானத் தூதாகவே அறிமுகமாகியிருக்கிறது. நாடு பிடிப்பதோ அல்லது செல்வங்களைக் கொள்ளையடிப்பதோ ஒரு போதும் முஸ்லிம்களின் இலக்காக இருந்ததில்லை. சிந்துவின் மீதான படையெடுப்பும் கூட சில அரசியல் காரணங்களுக்காவே நிகழ்ந்திருக்கிறது.

இந்தியாவை ஆட்சி செய்த பல்வேறு முஸ்லிம் ஆட்சிப் பரம்பரைகளும் இந்தியாவையே தங்கள் தாய் நாடாகக் கொண்டார்கள். அவர்கள் இந்தியாவை வளர்ப்பதையே நோக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். மாற்றமாக இந்தியாவைக் கொள்ளையடித்து தமது நாட்டுக்கு எடுத்துச் சென்றனர் என்று சொல்வதற்கான ஒரு வரலாறு முஸ்லிம்களுக்கு இல்லை.

முஸ்லிம் ஆட்சியாளர்கள் மனிதர்கள் என்ற வகையில் அவர்களது ஆட்சிமுறையில் பலம் பலவீனங்கள் காணப்பட்டதை மறுப்பதற்கில்லை. முஸ்லிம்களது ஆட்சி என்ற ஓரே காரணத்திற்காக அந்த ஆட்சியைப் புனிதமாக நோக்க முடியாது. குறைபாடுகள் ஏற்கப்படல் வேண்டும். ஆனால் அவற்றை இஸ்லாத்தின் குறைபாடுகளாகவோ அல்லது இஸ்லாம் மேற்கொண்ட ஏகாதிபத்தியமாகவோ நோக்க முடியாது. அன்றைய உலகின் பொது வழக்காக இருந்த சாம்ராஜ்ய முறையின் ஒரு வடிவமாகவே அதனை நோக்க முடியும். ஆனால் முஸ்லிம்கள் ஒப்பீட்டு ரீதியில் சிறந்த ஆட்சியைச் செய்திருக்கிறார்கள்.

முஸ்லிம்கள் இந்தியாவை ஆயிரத்திற்கும் மேற்பட்ட வருடங்கள் ஆட்சி செய்திருக்கிறார்கள். அந்தக் காலப்பகுதி இந்திய அரசியலில், சமய,சமூக, பண்பாட்டு விழுமியங்களில், கலை, கலாச்சார அம்சங்களில், கல்வி மற்றும் பொருளாதாரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தியிருக்கிறது. இன்று வரை இந்தியாவை பன்மைத்துவத்தின் எடுத்துக்காட்டாக வைத்திருப்பது இந்த தாக்கங்கள்தாம். மாத்திரமன்றி உலகத்திற்கு புதிய சிந்தனைகள், நெறிமுறைகள், கலையம்சங்கள் போன்றவற்றை வழங்கவும் இது காரணமாகியுள்ளது.

எனவே ஒவ்வொரு சமூகமும் ஏனைய சமூகங்களின் இருப்பையும் தனித்துவத்தையும் மதித்து, அதனை ஏற்று நடப்பதில்தான் பன்மைத்துவத்தின் அழகு தங்கியிருக்கின்றது. மாத்திரமன்றி பன்மைத்துவத்தை மிகச் சரியாகப் பயன்படுத்திக் கொள்கின்ற பொழுது, ஒவ்வொரு சமூகத்தனதும் சிறப்பம்சத்தையும் தனித்திறமையையும் நாட்டின் பொது இலக்குகளை அடைந்து கொள்ளும் திசையில் வழிநடாத்த முடியும். இதுதான் அபிவிருத்திற்கும் முன்னேற்றத்துக்குமான சிறந்த வழி. ஒரு சிறந்த இந்திய சமூகம் உருவாக இதுவே வழிகோலும் எனக் கூறி விடைபெறுகிறேன்.

அக்ரம் அப்துல் ஸமத்

03-12-2019

உசாத்துணைகள்

1. அல்பலாதூரி அபில் அப்பாஸ் அஹ்மத் இப்னு யஹ்யா இப்னு ஜாபிர், புதூஹுல் புல்தான், பெய்ரூத், முஅஸ்ஸஸதுல் மஆரிப், 1987.
2. சந்த் தாரா, மொ.பெ, அந்நத்வி முகம்மத் அய்யூப், அஸருல் இஸ்லாம் பிஸ்ஸகாபா அல் ஹின்தியா, பெய்ரூத், முஅஸ்ஸதுல் பிக்ரில் அரபி, 1946.
3. தங்கமணி பொன், பழங்கால இந்தியா அரசியலும் பண்பாடும் கி.பி 1206 வரை, தமிழ் நாடு, பொன்னையா பதிப்பகம், 1992.
4. சந்த் தாரா, அஷ்ஷகாபா அல்ஹின்தியா வவுஸுலுல் முஸ்லிமீன் இலல் ஹின்த், ஷகாபதுல் ஹின்த், பாகம் 13 இதழ் 1, 1950.
5. அல்பக்கி இஸாமுத்தீன் அப்துஸ்ஸுன், பிலாதுல் ஹின்த் பில் அஸ்ரில் இஸ்லாமி, கெய்ரோ, ஆலமுல் குத்ப், 1980.
6. நத்வி செய்யத் சுலைமான், மெ.பெ. அப்துல் ரஹ்மான் அஹ்மத் முஹம்மத், அல் அலாகாத் அல் அரபிய்யா அல் ஹின்தியா, கெய்ரோ, அல்மர்கஸுல் கௌமி லித்தர்ஜமா, 2008.
7. அஸ்ஸாதாதி அஹ்மத் மஹ்மூத், தாரீகுல் முஸ்லிமீன் பீ ஷிப்ஹில் காரா அல்ஹின்தியா வஹழாரதுஹும் அல்ஜுஸ்ஊஸ் தானி அத்தெளலா அல்மகூலிய்யா, கெய்ரோ, அத்மதபஆ அந்நுமூஸஜிய்யா, தி.இ.
8. நெடுஞ்செழியன் கி, முஸ்லிம் மன்னராட்சியில் இந்தியாவின் முன்னேற்றம், சென்னை, இஸ்லாமிய நிறுவனம் டிரஸ்ட், 2018.
9. மதியவன் தாழை, முஸ்லிம் மன்னர்கள் ஆண்ட இந்தியா, சென்னை, சாஜிதா புக் சென்டர், 2017.
10. இப்றாகீம் செய்யத், இந்தியாவில் முஸ்லிம் ஆட்சி, சென்னை, யுனிவர்ஷல் பப்லிஷர்ஷ், 2014.
11. அல்மலபாரி அஹ்மத் ஸைனுத்தீன் அல்ம஼பரி, துஹ்பதுல் முஜாஹிதீன் பீ அஹ்வாலில் புர்துகாலிய்யீன், பெய்ரூத், முஅஸ்ஸஸதுல் வபா, 1985.
12. அந்நமிர் அப்துல் முன்இம், தாரீகுல் இஸ்லாம் பில் ஹின்த், பெய்ரூத், அல்முஅஸ்ஸஸா அல்ஜாமிஇய்யா லித்திராஸாத் வந்நஷ்ர் வத்தெளஸீ஼, 1981.
13. அஸ்ஸல்லாபி அலி முகம்மத் முகம்மத், அத்தெளலா அல்உமவிய்யா அவாமிலுல் இஸ்திஹார் வததாஇய்யாதுல் இன்ஹியார், இஸ்தன்பூல், தாருர் ரௌழா லித்திபாஆ வந்நஷ்ர் வத்தெளஸீ஼, 2018.
14. அல்ஜுவார்னா அஹ்மத் முகம்மத், அல்ஹின்த் பீ ழில்லிஸ் ஸியாதா அல்இஸ்லாமிய்யா திராஸா தாரீகிய்யா, இ.இ, முஅஸ்ஸஸது ஹமாதா லித்திராஸாத் அல்ஜாமிஇய்யா வந்நஷ்ர் வத்தெளஸீ஼, தி.இ.
15. ஆஸாருல் இஸ்லாம் அஸ்ஸகாபிய்யா பில் ஹின்த், ஸகாபதுல் ஹின்த், 1956, ப.6, வலைத்தளத்தில் காணப்படுகிறது, http://www.nidaulhind.com/2016/11/blog-post_31.html.
16. Purnima P, Impact of Islam on Hinduism/ History of India, Available at, http://www.historydiscussion.net/history-of-india/impact-of-islam-on-hinduism-history-of-india/6195.
17. Anand, Islam and Indian Culture, available at http://www.historydiscussion.net/history-of-india/islam-and-indian-culture/3170.

18. தஸ்தகீர் ஏ, இந்திய நாட்டை உருவாக்கியவர்கள் முஸ்லிம்களே, 2014, வலைத்தளத்தில் காணப்படுகிறது,http://nidur.info/old/index.php?option=com_content&view=article&id=6249:இந்திய-நாட்டை-உருவாக்கியவர்கள்-முஸ்லிம்களே&catid=51:வரலாறு&Itemid=76.